# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

# வருடாந்த அறிக்கை

# 2011

# தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2011 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைக்கு இவ்வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு நான் பெருமிதம் அடைகின்றேன். பாவனையாளர் அலுவலுகள் அதிகாரசபையானது, சந்தையில் நியாயமான வர்த்தக செயற்பாடுகள் மற்றும் ஆரோக்கியமான போட்டி போன்றவற்றினை ஊக்குவிப்பதன் மூலம் பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு இந்த ஆண்டிலும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது. இத்தகைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களும் "ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வியாபார நடவடிக்கைகளினூடாக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்" எனும் நோக்கெல்லையின் அடிப்படையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட அலகுகளை வலுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களும் 2011 இல் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுள்ளன. செயல்நிறைவேற்ற இலக்குகளுடன் அனைத்து மாவட்ட அலகுகளுக்குமான செயல்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபையானது, பாவனையாளர் உரிமைகளை மதிக்காது பாவனையாளர்களைச் சுரண்டுகின்ற வியாபாரிகளிடமிருந்து,நாடுபூராகவுமுள்ள பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

2011 ஆம் ஆண்டுக்கான சர்வதேச பாவனையாளர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறான பாவனையாளர் உரிமைகளின் தொனிப் பொருளானது, "எமது பணம் – எமது உரிமைகள்" என்பதாக அமைந்திருந்தது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் வழங்கப்படும் சேவைகள், பாவனையாளர் உரிமைகள் மற்றும் நிதி நிறுவனங்களை தெரிவு செய்கையில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் போன்றவை தொடர்பில் அனைத்து மாவட்டங்களிலும் நடமாடும் விழிப்புணர்வு பிரச்சாரம்மேற்கொள்ளப்பட்டது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, இத்தகைய நடமாடும் விழிப்புணர்வு பிரச்சார நடவடிக்கைகளினூடாக நாடு பூராகவும் ஏறக்குறைய 15,000 பாவனையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கான நடவடிக்கையினை எடுத்துள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, 2011 இல், மொனராகலை புத்தளையில் நடாத்தப்பட்ட "தேசத்திற்கு மகுடம் – 2011" இனை முன்னிட்டும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைவாக செயற்படுகின்ற மற்றும் பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குகின்ற மிகச் சிறந்த வியாபாரிகளை தெரிவு செய்யும் பொருட்டு மொனராகலை மாவட்டத்தின் அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமுள்ள வர்த்தகர்களுக்கிடையே போட்டியொன்றினை நடாத்தியுள்ளது. பாவனையாளர் சங்கங்கள் மொனராகலை மாவட்டத்தின் ஆறு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் தாபிக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட "இசுரு சவிய" நிகழ்ச்சித்திட்டத்திலும் பங்குபற்றியது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் மற்றும் பணியினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களின் அத்தகைய உறுதியான ஆதரவின்றி பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் இத்தகைய சாதனையை அடைந்திருக்க முடியாது என்பது எனது உறுதியான நம்பிக்கையாகும்.

எமது முயற்சிகளுக்குத் தேவையான தனது தொலைநோக்கு தலைமைத்துவத்தினை வழங்கிய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் கௌரவ. ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வெற்றிக்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் வழங்கியமைக்காக அமைச்சின் செயலாளர் திரு.சுனில் எஸ். சிறிசேன அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ரூமி மர்சூக்
**தவிசாளர்**
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**

## எமது நோக்கு

ஒழுக்கம் நிறைந்த வியாபார கலாச்சாரமொன்றின் கீழ் நன்றாக பாதுகாக்கப்பட்ட பாவனையாளர் உலகமொன்றினை அடைதல்

## எமது பணி

பாவனையாளருக்கு தத்துவமளித்தல், வர்த்தக ஒழுங்குவிதிகள் மற்றும் ஆரோக்கியமான போட்டியினை ஊக்குவித்தல் மூலம் பாவனையாளர் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாத்தல்

## எமது ஒருங்கிணைந்த நோக்கங்கள்

(1 வியாபார ஒழுங்குபடுத்தல்களினூடாக பாவனையாளரை சிறப்பாக வைத்திருத்தல்

(2 நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளினால் பாதிக்கப்படுகின்ற பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

(3 பாவனையளருக்கு அறிவூட்டுதல் மற்றும் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல் ஆகியவற்றினூடாக பாவனையாளரை வலுவூட்டுதல்

(4 வர்த்தக போட்டி எதிர் செயற்பாடுகளுக்கெதிராக வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைப் பாதுகாத்தலும் போட்டியை ஊக்குவித்தலும்

(5 திறனைக் கட்டியெழுப்புவதனூடாக அதிகாரசபை செயற்திறனை மேம்படுத்தல்

## <u>எமது ஒருங்கிணைந்த முக்கியத்துவம்</u>

### நம்பிக்கை

செயல்நிறைவேற்ற இணக்கப்பாட்டினை பேணுதலும் தங்கியிருக்கும் நிலையினை உறுதிப்படுத்துதலும்.

### நேர்மை மற்றும் நல்லிணக்கம்

அனைத்து நடவடிக்கைகளிலும் நேர்மையாகவும் கண்ணியமாகவும் நடந்து கொள்ளுதல்

### பொறுப்புடமை

நிறைவேற்றப்படுகின்ற எப்பணியிலும் வெளிப்படைத்தன்மை கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் பொறுப்புணர்வு ஆகியவற்றினைப் பேணுதல்

### குழு முயற்சி

அனைத்து ஊழியர்களும் பொதுவான இலக்குகளை அடைவதற்கு இணைந்து பணியாற்றுவதுடன் பரஸ்பர புரிந்துணர்வு, மதிப்பு, உரிய தொடர்பாடல் மற்றும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடிய நம்பிக்கையினை மேம்படுத்துதல் வேண்டும்.

### அங்கீகாரம்

ஊழியர்களின் மிகச் சிறந்த செயல்நிறைவேற்றத்தினை பாராட்டுதலும் ஊக்கப்படுத்துதலும்.

### அர்ப்பணிப்பு

வழங்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கான அர்ப்பணிப்பு

### பொறுப்புவாய்ந்த தன்மை

சேவைகளை வழங்குவதற்கான விருப்பமும் தயார் நிலையும்

### உருவாக்கமும் புத்தாக்கமும்

அனைத்து விடயங்களுக்கும் தொடர்ச்சியான மேம்படுத்தலுக்கான புதிய எண்ணங்களை உருவாக்குதல்

2 ஆவது மாடி,
கூ.மொ.தா. செயலக கட்டிடம்,
இல.27, வொக்ஸோல் வீதி,
கொழும்பு 02.
2013.07.23

கௌரவ. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கட்கு,

ஐயா,

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. நிதிக்கூற்றின் பிரிவு 14(2) இன் நியதிகளின்படி, 2011 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையுடன் கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகை, வருமான செலவு கணக்கு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையினையும் இத்தால் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றேன்.

ரூமி மர்சூக்
தவிசாளர்
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை**

# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

# வருடாந்த அறிக்கை -2011

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எம்மைப் பற்றி | 7 |
| | 1.1 அறிமுகம் | 7 |
| | 1.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை | 7 |
| | 1.3 அதிகாரசபையின் பதவியினர் | 8 |
| | 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை | 9 |
| 2. | நாம் ஏன்? (அதிகாரசபையின் நோக்கங்கள்) | 10 |
| 3. | நாம் என்ன செய்கின்றோம்? (அதிகாரசபையின் தொழிற்பாடுகள்) | 11-12 |
| 4. | விசேட கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் -2011 | 13 |
| 5. | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரபையின் செயல்நிறைவேற்றம்.-2011 | 14-35 |
| 6. | 2011 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று | 36 |
| 7. | 2011 டிசம்பர் 31 இல் முடிடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று | 37 |
| 8. | 2011 டிசம்பர் 31 இல் முடிடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று | 38-44 |
| 9. | 2011 டிசம்பர் 31 இல் முடிடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புக்கள் | 45-57 |
| 10. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான தவிசாளரின் கருத்துரைகள் | 58-70 |

## அத்தியாயம் 1

## எம்மைப் பற்றி

### 1.1 அறிமுகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டமானது நிறை வேற்றப்பட்டதனைத் தொடர்ந்து 1979 ஆம் ஆண்டின் 01 ஆம் இல. பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம் 1987ஆம் ஆண்டின் 01 ஆம் இல. நியாய வியாபார ஆணைக்குழு சட்டம் மற்றும் 1950 ஆம் ஆண்டின் விலைகள் கட்டுப்பாட்டுச் சட்டம் என்பன நீக்கப்பட்டதுடன் நியாய வியாபார ஆணைககுழு மற்றும் உள்நாட்டு வர்த்தக திணைக்களம் என்பனவற்றின் செயற்பாடும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

சட்டமூலத்தின் பாயிரத்தின்படி அதிகாரசபையானது நியாய வியாபார பழக்க வழக்கங்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபார செயற்பாடுகள் என்பவற்றிற்கெதிராக வியாபாரிகளையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாப்பதுடன் பண்டங்களினதும் சேவைகளினதும் வியாபாரத்தையும் விலைகளையும் ஒழுங்குபடுத்துவதன் மூலம் பாவனையாளர்களின் சிறந்த பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்வதும், இயலுமானவிடத்தெல்லாம் பண்டங்களினதும் சேவைகளினதும் போட்டி விலை குறித்தலை மேம்படுத்தி, வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடையே ஆரோக்கியமான போட்டியை உறுதிப்படுத்துவதன் மூலம் பாவனையாளர்களின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்குமாக உருவாக்கப்பட்டதுமாகும்.

### 1.2 <u>அதிகாரசபையின் அமைப்பு</u>

சட்டத்தின் நியதிகளின்படி, அதிகாரசபையானது சட்டத்தில் விதித்துரைக்கபபட்டுள்ள தகைமைகள் மற்றும் அனுபவங்களை கொண்டுள்ளவர்களிடருந்து அமைச்சரினால் நியமிக்கப்படும் தவிசாளர் மற்றும் பத்திற்குக் குறையாத ஏனைய உறுப்பினர்களையும் கொண்டிருக்கின்றது.

**அதிகாரசபையின் உறுப்பினர்கள் – 2011**

2011 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| திரு.ரூமி மர்சூக் | - தவிசாளர் |
| திரு.மில்ரன் அமரசிங்க | - முழு நேர உறுப்பினர் |
| திரு.சுனில் ஜயவீர | - முழு நேர உறுப்பினர் |
| மேஜர் ஜெனரல் பி. சந்திரவன்ச | - முழு நேர உறுப்பினர் |
| வண. ரெக்கவ ஜினரத்ன தேரர் | |
| செல்வி. சந்திரா எக்கநாயக்க | - திறைசேரி பிரதிநிதி |
| திரு.ஏ.ஜி.பி.கித்சிறி | -அமைச்சு பிரதிநிதி |

| | | |
|---|---|---|
| திரு.சுகத் மோஹன் பிராங் டீ சில்வா | - | உறுப்பினர் |
| திரு.துசான் சொய்சா | - | உறுப்பினர் |
| திரு.வினோத் நி. தன்சிகனி | - | உறுப்பினர் |
| திரு. ஹனிப் ஜீசூப் | - | உறுப்பினர் |
| திரு. ஜே.எம். ஜயதிலக ஜயசுந்தர | - | உறுப்பினர் |
| திரு.வருண அளவ்வ | - | உறுப்பினர் |
| திரு.அநுர பெர்ணாண்டோ | - | உறுப்பினர் |
| திரு. அனில்குமார சேனாதீர | - | உறுப்பினர் |
| திரு. பசில் வணியங்கன்பேர்க் | - | உறுப்பினர் |

திரு.டபிள்யூ.ஏ.சி. ஹேமகுமார
திரு.ஆர்பி.தென்னக்கோன்
மேஜர் வை.எச்.பி.என்.வை சேனாதிபதி
திரு.எம்.பி.எம் இப்ராஹிம்
திரு.எச்.எம்.எல்.எச். பண்டார ஹேரத்
திரு.மடவ சஞ்சீவ வத்தேகம்
கலாநிதி. ஜயந்த பாலவர்தன
மேஜர் ஜெனரல் விஜித வெலிகல – 2011.05.27 இல் இராஜினாமா செய்துள்ளார்.
திரு.பிரியந்த மாயாதுன்ன - 2011.05.27 இல் இராஜினாமா செய்துள்ளார்
திரு.ஹனிப் ஜீசூப்
திரு.எம்.உச். எப். ஷெரிப்

## 1.3 அதிகாரசபையின் பதவியினர்

திரு.ரூமி மர்சூக் அவர்கள் 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் தவிசாளராக தொடர்ந்து சேவையாற்றியுள்ளார். திருமதி சந்திரிக்கா திலகரத்ன(பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் பணிப்பாளர்) 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதில் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றியிருந்தார்.

**<u>2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையின் பதவியினர்</u>**

| | | |
|---|---|---|
| திருமதி தீப்தி திசேரா<br>எம்பிஏ (பிஜஎம்- ஸ்ரீ ஜே) சட்டத்தரணி | - | பதில் பணிப்பாளர் நாயகம்/ பணிப்பாளர் (இணக்க அமுலாக்கல்) |
| திருமதி சந்திரிக்கா திலகரத்ன<br>பிஎஸ்ஸி(விவசாயம்),எம்எஸ்ஸி(முகாமை)(ஸ்ரீ ஜெயவர்தனபுர) | - | பணிப்பாளர் ( பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்) |
| திருமதி சாந்தினி திருநீலகண்டன்<br>ஏசிஈஏ | - | பணிப்பாளர் (போட்டி ஊக்குவிப்பு) |

எம்.பி.எம்,பி.கொம்(விசேட),ஏஐபிஎஸ்எம்,டிபிஎஸ்எம்

திரு. சம்பத் அங்குலுகஹ - பணிப்பாளர் ( மனித வளம் மற்றும் நிருவாகம்)

திரு. ரோஹான் மீவனகே 2011 ஆண்டு காலப்பகுதியில் விலையிடல் மற்றும் முகாமைப் பணிப்பாளரின் கடமைகளை தொடர்ந்து மேற்கொண்டு வந்துள்ளார்.

## 1.4 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

பாவனையாளர் அலுவல்கள் பேரவையானது சட்டத்தின் iv ஆம் பகுதியின் நியதிகளின்படி தாபிக்கப்பட்டதாகும்.

**பேரவையின் உறுப்பினர்கள்- 2011**

திரு.உபாலி சேனாரத்ன - தலைவர்

திரு. வசந்த குணவர்தன - உறுப்பினர்

திரு. சுதத் விஜேவிக்கிரம - உறுப்பினர்

**பேரவை செயலாளர்**

செல்வி. லேகா ஆரியரத்ன

(சட்டத்தரணி)

## 2. ஏன் நாங்கள் ?

### <u>அதிகாரசபையின் நோக்கங்கள்</u>

பின்வருவன அதிகாரசபையின் நோக்கங்களாகும்;

(அ) பாவனையாளர்களின் உயிருக்கும் சொத்துக்கும் தீங்கு விளைவிக்கும் பண்டங்களின் சந்தைப்படுத்தவதற்கு அல்லது அப்படியான சேவைகளின் ஏற்பாடுகளிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல்.

(ஆ) நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாப்பதுடன் பாவனையாளர்களின் நலன்களில் போதிய கவனம் செலுத்துவதற்கு உத்தரவாதம் அளித்தல்.

(இ) முடியுமானவரை நுகர்வோர்கள் நியாயமான விலைகளில் பொருட்களையும் சேவைகளையும் போதுமானளவு பெற்றுக்கொள்வதனை உறுதிப்படுத்தல்.

(ஈ) நியாயமற்ற வர்த்தக செயல்முறைகள் மட்டுப்படுத்தப்பட்ட வியாபார பழக்க வழக்கம் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் அல்லது வேறு ஏதாவது வகையில் பாவனையாளர் வர்த்தகர்களினால் சுரண்டப்படுவதற்கு எதிராக பரிகாரம் வழங்குதல்.

# 3. நாங்கள் என்ன செய்கின்றோம் ?

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தொழிற்பாடுகள்

அதிகாரசபையின் தொழிற்பாடுகள் பின்வருமாறு -

(அ) தொழில் முயற்சியாளர்களுக்கிடையே கட்டுப்படுத்துதல் அல்லது நீக்குதல்–

- (i) கட்டுப்பாடான வர்த்தக உடன்படிக்கைகள்
- (ii) விலைகள் தொடர்பில் தொழில் முயற்சிகளுக்கிடையே ஒழுங்குகள் செய்தல்
- (iii) சந்தையிலுள் அல்லது சந்தையின் கணிசமான பகுதியிலுள் உள்நாட்டு வர்த்தகம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பிலான ஆதிக்க நிலையினை துஷ்பிரயோகம் செய்தல், அல்லது
- (iv) உள்நாட்டு அல்லது சர்வதேச வர்த்தக அல்லது பொருளாதார அபிவிருத்தியை எதிராகப்பாதிக்கின்ற ஏதாவது போட்டியைக் கட்டுப்படுத்துதல்.

(ஆ) எதிர் போட்டிச் செயற்பாடுகள் மற்றும் ஆதிக்க நிலையிலயினை துஷ்பிரயோகித்தல் என்பன பற்றி புலனாய்வு செய்தல் அல்லது விசாரணை செய்தல்.

(இ) பொருட்கள், சேவைகளை வழங்குவோருக்கிடையில் பயன்தர தக்கவல்ல போட்டியை பேணுதலும் முன்னேற்றுதலும் மேம்படுத்துதலும்.

(ஈ) பாவனையாளர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் பொருட்கள் சேவைகளைப் பயன்படுத்தும் ஏனையோர்கள் அத்தகைய பொருட்கள் சேவைகளின் விலைகள், கிடைப்பனவு, தரம் வழங்கப்பட்ட வகை தொடர்பில் அவர்களின் நலன்களை மேம்படுத்துதலும் உரிமைகளை முன்னேற்றுவதும் பாதுகாப்பதும்.

(உ) கொள்வனவுக்கு பயன்படுத்தக் கிடைக்க செய்யப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் தரம்,ஆற்றல்,தூய்மை,தராதரங்கள் மற்றும் விலை மற்றும் விலை பற்றி பாவனையாளர் அறியும் வகையில் பாவனையாளர்களுக்கு அறிவித்தல்.

(ஊ) இச்சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் புலனாய்வு விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

(எ) பயனுறுதி குறைந்த போட்டிச் சந்தைகளில் போட்டி விலைகளை முன்னேற்றுதல்.

(ஏ) சந்தை நிலைகள், பாவனையாளர் அலுவல்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொள்ளல், அறிக்கைகளைப் பிரசுரித்தல் மற்றும் பொது மக்களுக்கு தகவல் கொடுத்தல்.

(ஐ) அரசாங்க தனியார் துறைகளில் வினைத்திறன் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

(ஒ) பாவனையாளரின் உரிமைகள் சிறந்த உடல்நிலை, இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர் கல்வியினை முன்னேற்றுதல்.

(ஓ) பிற நிறுவனங்களுடன் சந்தை நிலைமைகள், பாவனையாளர் அலுவல்கள் தொடர்பிலான தகவல் பரிமாற்றத்தை முன்னேற்றுதல்.

(ஔ) பாவனையாளர் நிறுவனங்களின் தாபித்தலை மேம்படுத்துதல் உதவியளித்தல் மற்றும் ஊக்குவித்தல்

(ஃ) அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் சேவைகள் தொடர்பிலான அறவீடுகள் அல்லது கட்டணங்களை விதித்தல்

(க) அதிகார சபையின் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவும் வசதிப்படுத்தலுக்கு தேவையாகவுள்ள குழுவை அல்லது குழுக்களை நியமித்தல்.

(கா) அதிகாரசபையின் நோக்கத்தை அடைவதற்குத் தேவையாகவுள்ள ஏனைய நடவடிக்கைகளையும் அதிகாரசபையின் தொழிற்பாடுகளை பயனுறுதியுடன் நிறைவேற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல்.

## 4. விசேட கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித்திட்டங்கள் - 2011

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது அதிகாரசபையின் சேவைகளின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு பின்வரும் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியிருந்தது.

]

- **மாவட்ட அலுவலகங்களினை வலுப்படுத்துதல்**

இந்த நிகழ்ச்சித்திட்டமானது 2011 இலும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இலக்குகளுடன் கூடியசெயல் திட்டமொன்று அனைத்து மாவட்ட அலுவலகங்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தனிநபர்களினதும் குழுக்களினதும் செயற்பாட்டினை மதிப்பாய்வு செய்வதற்கான செயல் நிறைவேற்ற மதிப்பாய்வொன்று ஒவ்வொரு மாதத்தினதும் இறுதியில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பதன் மூலம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது குறிப்பாக சந்தை நுண்ணாய்வு மற்றும் திடீர் சோதனைகளை நடாத்துதல் மற்றும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுகின்ற வர்த்தகர்களிடமிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்களில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்துள்ளது.

மேலும், கையடக்கத்தொலைபேசிகள் மற்றும் இணைய இணைப்புக்கள் போன்ற மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பாஅஅ ஆனது மாவட்ட அலுவலகங்களினால் பயன்படுத்தப்படும் வாடகை வாகனங்களுக்குப் பதிலாக வாகனங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு திறைசேரியிடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன் சந்தை திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகளை மேற்கொள்வதற்காக 2012 இன் ஆரம்பத்தில் 15 ஆசனங்களைக் கொண்ட நான்கு வான்களும் டபிள் கப் வண்டியொன்றும் பெறப்பட்டுள்ளன.

- **புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான பதவியினர் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

2011 செப்ரெம்பர் மற்றும் ஒக்டாபர் மாதங்களில் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பதவியினர் விருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம் சந்தை நுண்ணாய்வுகள் மற்றும் தவறிழைக்கும் வர்த்தகர்களுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களினால் எதிர்கொள்ளப்படும் பிரச்சனைகளை அங்கீகரிப்பதற்கும் நியாயமான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதுமேயாகும். நிகழ்ச்சித்திட்டத்தின் போது புலனாய்வு உத்தியோகத்தர்கள் சில குழுக்களாக வகைப்படுத்தப்பட்டதுடன் அறிவு கூட்டல் அமர்வுகளும் நடாத்தப்பட்டதுடன் குழுத் தலைவர்களினால் இது தொடர்பான விளக்கமளித்தல்களும் நடாத்தப்பட்டன. மேலதிக மேமப்டுத்தல்கள் தேவைப்படுகின்ற பகுதிகளை இனங்காணும் பொருட்டு உயர் முகாமைத்துவ மற்றும் வெளியக மூலவள ஆற்றலபடுத்துநரினால் அறிவு கூட்டலினை மேம்படுத்துவதற்கான அமர்வுகளுக்கான மதியுரைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

- **பாவனையாளர் உரிமைகள் தின நிகழ்ச்சித்திட்டம்  - 2011**

சர்வதேச பாவனையாளர்களினால் பாவனையாளர் உரிமைகள் தின தொனிப்பொருளானது ***"எமது பணம் எமது உரிமைகள்"*** என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பிரதான நோக்கினை அடைதல், பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் அளிக்கப்படும் சேவைகள், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சேவைகளை பொது மக்கள் எவ்வாறு பெற்றுக் கொள்வது மற்றும் பாவனையாளர் அதிகாரசபையுடன் தொடர்புடைய அமைப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த தகவல்களை விளக்கமளிப்பதற்காக நடமாடும் பிரச்சார இயக்கத்தினை மாவட்ட ரீதியாக முன்னெடுத்தது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பேரூந்து நிலையங்கள், புகையிரத நிலையங்கள், சந்தைகள், பாடசாலைகளுக்கு அருகாமையில், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் போன்ற பொது இடங்களில் பாவனையாளர்களுக்கு அறிவூட்டும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் கை நூல்கள் என்பவற்றினை விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது. இதற்கான உதவுகையினை மத்திய வங்கியிடமிருந்தும் பெற்றிருந்தது. 2011 மார்ச 15 ஆம் திகதி, பாஅஅ ஆனது நாடெங்குமுள்ள ஏறக்குறைய 15,000 பாவனையாளர்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இலத்திரனியல் ஊடகங்களின் மூலமாக பாவனையாளர்களுக்கு அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. உலக பாவனையாளர் உரிமைகள் தொடர்பான கருப்பொருள் தொடர்பில் மத்திய வங்கியின் உதவுகையுடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றும் நடாத்தப்பட்டது. "எமது பணம், எமது உரிமைகள்" எனும் தொனிப் பொருளில் பத்திரிகை புதினப் பத்திரகைகளில் இலவச இணைப்பொன்றினைப் பிரசுரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில் மொழிகளில் கட்டுரைகளை பிரசுரிப்பதன் மூலமாக பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **தேசத்திற்கு மகுடம் – 2011 புத்தள**

பாஅஅ ஆனது மொனராகலை மாவட்டத்தில் நடாத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் நிகழ்ச்சித்திட்டத்தில் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றியது. பாஅஅ ஆனது 11 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் நடாத்தப்பட்ட அனைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களிலும் பங்குபற்றியது. மொனராகலை மாவட்டத்திலுள்ள தேசிய பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கிடையே வர்ணம் தீட்டும் போட்டியும் ஏற்பாடு செய்யப்பட்டது. வெற்றியாளர்கள் தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பரிசளிக்கப்பட்டார்கள்.

பாஅஅ ஆனது பாவனையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்குவதற்காக பாஅஅ இனால் அறிமுகப்படுத்தப்பட்ட சட்ட மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கி செயற்படுகின்ற சிறந்த வர்த்தகர்களை தெரிவு செய்யும் பொருட்டு அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுள்ள வர்த்தகர்களுக்கிடையே போட்டியொன்றினை நடாத்தியது. பாஅஅ ஆனது இந்நிகழ்ச்சித்திட்டத்தின்

கீழ் 1132 கடைகளை பரிசோதனை செய்துள்ளது. ஒவ்வொரு உஅஅ பிரிவுகளிலிருந்தும் மூன்று வர்த்தகர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மாதிரி கடை போட்டியில் வெற்றியீட்டியோர்களுக்கு கௌரவ. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சரினால் கண்காட்சியில் பரிசளிக்கப்பட்டது. பாவனையாளர் சங்கங்கள் மொனராகலை மாவட்டத்தின் 6 உஅஅ பிரிவுகளில் தாபிக்கப்பட்டன.

பங்குபற்றாளர்களுக்கான வினா – விடை நிகழ்ச்சியொன்று கண்காட்சி சாவடியில் நடத்தப்பட்டதுடன் வெற்றியாளர்கள் இரண்டு மணித்தியாலங்களுக்கொரு முறை தெரிவு செய்யப்பட்டார்கள். இந்நிகழ்ச்சித்திட்டமானது மொனராகலை மாவட்ட பொது மக்களுக்கு அறிவூட்டுவதற்கு பெரிதும் உதவியுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, பொது மக்களை அறிவூட்டுவதற்கு பாவனையாளர் விழிப்புணர்வு மற்றும் வீடியோ மூலமான விளக்கமளித்தல் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## குருநாகல் மாவட்டத்தில் இசுரு சவிய நிகழ்ச்சித்திட்டம்

இந்நிகழ்ச்சித்திட்டமானது 2011 யூனில் நடாத்தப்பட்டது. கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பாஅஅ யும் பங்குபற்றியது. பாஅஅ இனால் ஏற்பாடு செய்யப்பட்ட கண்காட்சி சாவடியில் பாவனையாளர் விழிப்புணர்வு பீடம், பாஅஅ இன் சேவைகள் தொடர்பான வீடியோ அறிவூட்டல், பதாதைகள் மற்றும் சுவரொட்டிகள் என்பனவும் இடம்பெற்றிருந்தன. பாஅஅ ஆனது குருநாகல் மாவட்டத்தின் 30 உஅஅ பிரிவுகளில் மாதிரி கடை போட்டியொன்றினையும் நடாத்தியுள்ளதுடன் ஒவ்வொரு உஅஅ பிரிவுகளிலிருந்தும் சிறந்த வர்த்தகர்கள் மூன்று பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். வெற்றியாளர்களுக்கான வெற்றிக் கிண்ணங்கள் இசுரு சவிய கண்காட்சியில் வைத்து வழங்கப்பட்டன. சட்டத்துடன் இணங்கியவாறானதும் அவ்வாறில்லாததுமான இரண்டு வர்த்தக சாவடிகளை செய்முறைப்படுத்துகையின் மூலமாக வர்த்தக சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பில் வர்த்தக சமூகத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவூட்டுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## சந்தை நுண்ணாய்வினை கணனிமயப்படுத்துதல்

தலைமை அலுவலகத்தினால் கோரப்படுகின்ற தகவல்களைப் பெற்றுக் கொள்வதிலுள்ள தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு தலைமை அலுவலகத்துடன் அனைத்து மாவட்ட அலுவலகங்களையும் இணைக்கும் நோக்குடன் சந்தை திடீர் சோதனைகள் மற்றும் வழக்குத் தாக்கல்களை மேற்கொள்வதற்காக கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றினை விருத்தி செய்வதற்கான நடவடிக்கையொன்றும் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித்திட்டமானது கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற ஈ சேர்விஸஸ் லங்கா லிமிட்டடினால் விருத்தி செய்யப்பட்டது. மாவட்ட அலுவலகங்களுக்கான கணனிகள் மற்றும் இணைய இணைப்புக்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான ஆரம்ப கட்ட பயிற்சியளித்தல் அமர்வானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- **பாவனையாளர் மற்றும் வர்த்தக தகவல் பிரிவினை தாபித்தல்**

பொது மக்கள் மற்றும் வர்த்தக சமூகத்திற்குத் தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு பாவனையாளர் மற்றும் வர்த்தக தகவல் நிலையம் தாபிக்கப்பட்டதாகும். பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தகவல் மற்றும் சேவைகளைப் பெற விருப்பும் பாவனையாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் அதிகாரசபையின் அதிகாரிகளை சந்தித்து உரிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும். துண்டுப்பிரசுரங்கள், கைநூல்கள், மற்றும் அதிகாரசபையினால் பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் கட்டளைகளின் பிரதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

## 5. அதிகாரசபையின் செயல் நிறைவேற்றம்

நிருவாக கட்டமைப்பின்படி, அதிகாரசபையானது 6 பணிப்பாளர்களின் கீழ் தொழிற்படுகின்ற பகுதிகளைக் கொண்டுள்ளது. அவையாவன, பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் பிரிவு, இணக்க மற்றும் அமுலாக்கல் பிரிவு, விலையிடல் மற்றும் முகாமைப் பிரிவு, போட்டி ஊக்குவிப்பு பிரிவு, நிதி பிரிவு மற்றும் மனிதவள அபிவிருத்தி மற்றும் நிருவாகம்.
2011 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயல்நிறைவேற்றம் கீழே தரப்படுகின்றது.

(1) **தீங்கு விளைவிக்கும் மற்றும் தரங்குறைந்த பொருட்கள் மற்றும் சேவைகளுக்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

**(அ) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்**

5. **பணிப்புரை இல. 32**

பாஅஅ ஆனது இப்பணிப்புரையினை அனைத்து உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு ஏதேனும் பொருள் அல்லது பொருட்கள் தொடர்பில் புதினப்பத்திரிகைகள், திரைப்படங்கள், தொலைக்காட்சி,ஒளிப்பதிவு நாடா, ஒலிப்பதிவு நாடா, இணைய தளம் அல்லது வேறு ஏதேனும் அச்சு, மின் அல்லது இலத்திரனியில் ஊடக்கங்களில் விளம்பரங்களை வெளியீடு செய்யும் ஒவ்வொரு விளம்பரத்திலும் விற்பனை செய்வதற்காக விளம்பரப்படுத்தப்படும் அத்தகைய ஒவ்வொரு பொருள் அல்லது பொருட்களின் சில்லறை விலையினை குறிப்பிடுதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது. இப் பணிப்புரையினை விடுப்பதன் பிரதான நோக்கம் உண்மையான தகவல்களைப் பெற்று பாவனையாளர்களின் உரிமைகளை உறுதி செய்தல், கொள்வனவு செய்யவுள்ள பொருட்களின் ஆகக்கூடிய சில்லறை விலையினை நிர்ணயித்தல் போன்றனவாகும். புதினப் பத்திரிகைகளினூடாக விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் திடீர் சோதனைகளை நடாத்துவதற்கும் பணிப்புரையினை மீறி வர்த்தக செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வியாபாரிகளுக்கதிராக நீதவான் நீதிமன்றங்களில் வழக்குத்தாக்கல் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

6. **பணிப்புரை இல. 33**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட மரக்கறிகள் மற்றும் பழங்களின் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற உற்பத்தியாளர்கள், கொண்டுசெல்வோர், விநியோகஸ்தர் மற்றும் வியாபாரிகள் அனைவருக்கும் அவர்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பழங்களையும் மரக்கறிகளையும் பறிக்கும் போதும், சேகரிக்கும் போதும், களஞ்சியப்படுத்தும் போதும், னொண்டு செல்லும் போதும், விற்பனைக்காக காட்சிப்படுத்தும் போதும், விற்பனைக்காக கொரும் போதும் பிளாஸ்ரிக், தடித்த கடதாசி அல்லது மரத்தினாலான கொள்கலன்களைப் பயன்படுத்துதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது. இப்பணிப்புரையினை விடுப்பதன் நோக்கம் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் அறுவடையின் பின்னரான சேதங்களைக் குறைத்து உற்பத்தியாளர்களின் இலாபத்தினை மேம்படுத்தி பாவனாளர்களுக்கு நியாயமான விலைகளில் தரமான பழங்களையும் மரக்கறிகளையும் வழங்குவதேயாகும்.

7. **பணிப்புரை இல. 35**

அனைத்து தயாரிப்பாளர்கள் மற்றும் வியாபாரிகளும் குறித்துரைக்கப்பட்ட பொருட்களின் மீது, பொதியின் மீது அல்லது கொள்கலனின் மீது அல்லது பொருளினை சுற்றியுள்ள கடதாசியின் மீது அப் பொருளின் ஆகக்கூடிய சில்லறை விலை, தொகுதி இலக்கம், காலாவதி திகதி, தயாரிப்பு திகதி, தேறிய நிறை/எண்ணிக்கை என்பனவற்றினைக் குறித்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கப்படுகின்றது. கூந்தல் தைலங்கள், கூந்தல் ஜெல், கூந்தல் கிறீம், ஷம்பூ, லோஷன், ரல்கம் பவுடர், பேரிச்சம்பழங்கள், பொதி அல்லது கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் மரமுந்திரிகை, உணவு வர்ணமூட்டல் பதார்த்தங்கள் , உணவு சுவையூட்டல்கள், உணவு வற்றல்கள் மற்றும் பொதுகள் மற்றும் கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் உடனடி உணவுகள், பொதிகளில் விற்பனை செய்யப்படும் பாத்தரங்கள் சுத்தம் செய்யப்பயன்படுத்தப்படும் சவர்க்காரங்கள், கார் கழுவுவதற்குப் பயன்படுத்தப்படும் திரவங்கள், வாகன கண்ணாடி சுத்திகரிப்பான்கள், பொதி அல்லது கொள்கலன்களில் விற்பனை செய்யப்படும் ஆயுர்வேத உற்பத்திகள் என்பன குறித்துரைக்கப்பட்ட பொருட்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இப் பணிப்புரையினை விடுப்பதன் பிரதான நோக்கம் பாவனையாளர் கொள்வனவு செய்யவுள்ள பொருட்கள் தொடர்பான உண்மையான தகவல்களைப் பெற்று பாவனையாளர்களைப் உரிமைகளை உறுதி செய்வதேயாகும்.

8. **பணிப்புரை இல. 37**

இப்பணிப்புரையானது மின்சார மற்றும்/ அல்லது இலத்திரனியல் பொருட்கள்/சாதனங்கள்/ பொறிகள்/ துணைப்பொருட்கள் ஆகியவற்றின் அனைத்து தயாரிப்பாளர்கள், வியாபாரிகள், இறக்குமதியாளர்களுக்கும் அத்தகைய மின்சார மற்றும்/ அல்லது இலத்திரனியல்

பொருட்கள்/சாதனங்கள்/ பொறிகள்/ துணைப்பொருட்கள் என்பன அத்தகைய பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு கொள்வனவாளருக்கான அத்தகைய உரிமையானது மாற்றம் செய்யப்பட்ட திகதியிலிருந்து ஆகக்குறைந்தது ஆறு மாத காலப் பகுதிக்கு குறையாத கட்டுறுத்துக் காலத்தினைக் கொண்டிருத்தல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

9. **பணிப்புரை இல. 38**

பணிப்புரை இல.33 ஆனது வாழ்க்கைச் செலவு மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவை உப குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. பணிப்புரை இல. 38 இன்படி, வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பழங்கள் மற்றும் மரக்கறிகளின் உற்பத்தியாளர்கள், கொண்டு செல்வோர், விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தகர்கள் குறித்த பழங்களையும் மரக்கறிகளையும் சேகரிக்கும் போதும், களஞ்சியப்படுத்தும் போதும், கொண்டு செல்லும் போதும் பிளாஸ்ரிக், தடித்த கடதாசிகளினாலான கொள்கலன்களைப் பயன்படுத்துதல் வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றது.

**(ஆ) பொருட்களின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கு நியமங்களைப் பின்பற்றுதல்**

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பாஅஅ ஆனது, சந்தையில் கிடைக்கக்கூடிய பொருட்களின் தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் சட்டத்தின் பிரிவு 12 இன் கீழ் 2 பணிப்புரைகளை வழங்கியுள்ளது.

10. **பணிப்புரை இல. 34**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது இலங்கை கட்டளைகள் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட எஸ்எல்எஸ் உற்பத்தி சான்றுப்படுத்தல் குறியின்றி தயாரிப்பாளர், விநியொகஸ்தர அல்லது வியாபாரி எவரேனும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட களிமண்ணினாலான கூரை ஓடுகள் எதனையும் தயாரிக்கவோ, விநியோகிக்கவோ, களஞ்சியப்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ அல்லேது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, மொத்தமாகவோ அல்து சில்லறையாகவோ விற்பனை செய்ய முடியாதென பணிப்புரை விடுக்கின்றது.

11. **பணிப்புரை இல. 36**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது பெயின்ற்களின் தயாரிப்பாளர், இறக்குமதியாளர், பொதியிடுவோர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரி எவரேனும் இலங்கை கட்டளைகள் நிறுவகத்தினால் குறித்துரைக்கப்பட்ட மொத்த காரீயத்தின் உள்ளடக்கம் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழின்றி அத்தகைய பெயின்றகளை தயாரிக்கவோ, இறக்குமதி செய்யவோ, பொதி செய்யவோ, விநியோகிக்கவோ அல்லது

பயன்படுத்தவோ, மொத்தமாகவோ அல்லது சில்லறையாகவோ விற்பனை செய்யவோ அல்லது விற்பனைக்காக காட்ச்சிப்படுத்தவோ கூடாதென பணிப்புரை விடுக்கின்றது. இப்பணிப்புரையினை விடுப்பதன் பிரதான நோக்கம் சுகாரத்திற்கு கேடுவிளைவிக்கக்கூடிய இரசாயன பாதிப்புக்களிலிருந்து பாவனையாளரைப் பாதுகாப்பதேயாகும். இப்பணிப்ரையானது 2013 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

**(இ) இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த பொருட்களை கண்காணித்தல்**

நாட்டிற்குள் நுழைவு சாவடிகளினூடாக தரம் குறைந்த பொருட்கள் நுழைவதனை தவிர்ப்பதற்கு இலங்கை கட்டளைகள் நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இறக்குமதி பரிசோதனை திட்டத்தின் கீழ் அத்தகைய 93 சந்தர்ப்பங்களில் இலங்கை கட்டளைகள் நிறுவகமானது அவற்றினை மீள ஏற்றுமதி செய்யும்படி பரிந்துரை செய்துள்ளது.

**(ஈ) பாதுகாக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு கொள்கைகள்/சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதற்கு பங்களிப்பு செய்த தேசிய குழுக்களினை பிரதிநிதித்துவப்படுத்துதல்**

பாஅஅ ஆனது சுகாதார அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு,சுற்றாடல் அமைச்சு சுற்றாடல் அமைச்சு மற்றும் மின்சக்தி மற்றும் வலு அமைச்சு, பொருளாதார அபிவிருத்திக்கான தேசிய பேரவை போன்றவற்றின் கீழ் தொழிற்படுகின்ற தேசிய மட்டத்திலான குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றதுடன் பாவனையாளர்களை பாதுகாப்பதற்கான கொள்கைகள் மற்றும் சட்டவாக்கத்தினை அறிமுகப்படுத்துவதிலும் பங்களிப்பினை வழங்கியுள்ளது.

**(2) ஏமாற்றும் நடத்தை மற்றும் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளுக் கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

**(அ) விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள்**

பாஅஅ ஆனது பாவனையார் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் ஏற்பாடுகளின் படி வர்த்தக சமூகமானது இணங்கி நடத்தல் வேண்டும் என்பதனை அறிவூட்டுவதற்கு சட்டத்தின் விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பில் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அதிகாரசபையானது வர்த்தக மன்றம் மற்றும் வர்ததகர்கள் மற்றும் கம்பனிகளின் கூட்டமைப்புக்கு பயிற்சிபட்டறைகளினை நடாத்தி வருகின்றது. 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகாரசபையானது பாவனையாளர் சட்டம் தொடர்பில் வர்த்தக சமூகத்திற்கு 250 நிகழச்சித்திட்டங்களை நடாத்தியுள்ளது.

(ஆ) **சந்தை மேற்பார்வை**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சில முறையற்ற செயற்பாடுகளை குற்றமாக இனங்கண்டுள்ளனது. முறையற்ற செயற்பாடுகளினுள் லேபலிடும் அறிவுறுத்தல்களினை மீறுதல், பொறிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்றல், பொருட்களை விற்பனை செய்வதற்கு மறுத்தல், பொருட்களை வைத்திருப்பதற்கு மறுத்தல், பொருட்களை பதுக்குதல், அதிகாரசபையின் எழுத்து மூலமான அங்கிகாரமின்றி குறித்த சில பொருட்களில் சில்லறை மற்றும் மொத்த விற்பனை விலைகளினை அதிகரித்தல், விலைப்பட்டியலை காடசிப்படுத்தாமை, கொள்வனவாளர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்காமை, தயாரிப்பாளர்கள்/ வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படும் தவறான அல்லது ஏமாற்றும் நடத்தை மற்றும் பொய்யான பிரதிநிதித்துவம் ஆகியவற்றினை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டமானது பொதுவான சில முறையற்ற செயற்பாடுகளாக இனங்கண்டுள்ளது.

அதிகாரசபையானது சட்டத்தின் மீறுதல்களை கண்காணிப்பதற்கு முறையான சந்தை மேற்பார்வைகள் மற்றும் திடீர் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றது. தவறிழைத்த வியாபாரிகள் உரிய மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டு சட்டத்தின் 60 வது பிரிவில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் தண்டப்பணங்கள் விதிக்கப்படுகின்றன.

குறித் ஆண்டு காலப்பகுதியில் 36,041 சந்தை திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனதுடன் இத்தகைய திடீர் சோதனைகள் தலைமையக உத்தியோகத்தர்கள் மற்றும் பாஅஅ இன் மாவட்ட அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2.3 மடங்கு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. சட்டத்தின் ஏற்பாடுகளினை மீறுவதற்காக தவறிழைத்த வியாபாரிகள் மீது நீதிமன்றங்களினால் விதிக்கப்படும் தண்டப் பணத்தொகையானது 2011 ஆம் ஆண்டில் ரூபா 88.486 மில்லியன்களாகும். இது முன்னைய ஆண்டினைக காட்டிலும் 2.1 மடங்கு அதிகரிப்பினைக் காட்டுகின்றது.
சந்தை திடீர் சோதனைகள் மற்றும் அறவீடு செய்யப்பட்ட தண்டப்பணங்கள் முறையே அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 1:சந்தை திடீர் சோதனைகளின் முன்னேற்றம்**




**அட்டவணை 2: திடீர் சோதனைகளின் மீது விதிக்கப்பட்ட தண்டப் பணங்கள்**



**(இ) இனங்காணப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் மீது ஆகக்கூடிய சில்லறை விலையினை (ஆசிவி) அமுல்படுத்துதல்**

"நாட்டிற்கான நுழைவுச் சாவடியில் 5 இனங்காணப்பட்ட பொருட்களின் மீதான ஆகக்கூடிய சில்லறை விலையினை பொறித்தல்" எனும் வர்த்தமானி அறிவித்தலின் அமுலாக்கத்தின் மூலம் சுங்கத் திணைக்களம் பட்டியலிடலின் விரிவாக்கத்தின் குறை மதிப்பீட்டு இறக்குமதி கட்டுப்படுத்தப்படுவதுடன் பாதுகாக்கப்படுவதனால் கணிசமானளவு தொகையினை அறவீடு செய்ய முடிந்துள்ளது. குறித்த ஆண்டு காலப்பகுதியில் 330 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதுடன் அனைத்துக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 3. நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**(அ) பாவனையாளர் முறைப்பாடுகளை கையாளுதல்**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது சட்டத்தின் 13 ஆம் மற்றும் 32 ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பாவனையாளர் முறைப்பாடுகளில் தலையீடு செய்கின்றது. அதிகாரசபையானது, விற்பனையானது பிரிவு 12 இன் கீழ் தீர்மானிக்கப்பட்ட நியமங்கள் அல்லது மாதிரிகளுக்கு அமைவாக அல்லாமல் விற்பனை செய்யப்பட்ட ஏதேனும் பொருட்கள் அல்லது வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பிலான முறைப்பாடுகளிலும் தயாரிப்பாளர் அல்லது வியாபாரியினால் வழங்கப்பட்ட கட்டுறுத்து அல்லது உத்தரவாதத்திற்கு இணங்காத ஏதேனும் பொருட்களின் முறைப்பாடுகள் தொடர்பிலும் தலையீடு செய்கின்றது.

2011 ஆம் ஆண்டில் அதிகாரசபையானது 1604 முறைப்பாடுகளை பெற்றுள்ளதுடன் இரண்டு தரப்புக்களினதும் திருப்தியுடன் 604 முறைபாடுகளுக்கு தீர்வு காணப்பட்டது. மாவட்ட அலுவலகங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்ட பாவனையாளர் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 32 ஆகும். 683 முறைப்பாடுகள் சந்தை திடீர் சோதனைகளுக்கு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

பாவனையாளர் முறைப்பாடுகளை கையாண்ட விதத்லுள்ள முன்னேற்றமானது முறையே அட்டவணை 3 மற்றும் அட்டவணை 4 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 3: 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கையாளப்பட்ட முறைப்பாடுகளின் முன்னேற்றம்**

| **பாவனையாளர் முறைப்பாடுகள்** | **2011** |
|---|---|
| பெறப்பட்ட முறைப்பாடுகள் | 1591 |
| ஏனைய நிறுவனங்களுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 158 |
| மாவட்ட அலகுகளுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 31 |
| ஏனைய பிரிவுகளுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 115 |
| திடீர் சோதனைகளுக்கு குறிப்பீடு செய்யப்பட்டவை | 688 |
| நிறைவு செய்யப்பட்டவை | 593 |
| நிராகரிக்கப்பட்டவை | 83 |
| நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள் | 291 |

**அட்டவணை 4: பாவனையாளர் முறைப்பாடுகளை விசாரணை செய்வதில் ஏற்பட்ட முன்னேற்றம்.**

| **விசாரணைகள்** | **2011** |
|---|---|
| நிலையானவை | 124 |
| தீர்வு காணப்பட்டவை | 26 |
| வழங்கப்பட்ட கட்டளைகள் | 24 |
| நடத்தப்பட்ட கலந்துரையாடல்கள் (விசாரணைக்கு முந்தியவை) | 23 |

## 4. பாவனையாளர் அறிவூட்டுதலும் வலுவூட்டுதலும்

### (அ) பாவனையார் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரபையானது, பொதுமக்களுக்கு அவர்களின் பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள், நடைமுறை பாவனையாளர் சட்டவிதிகள் , சிறந்த பாவனயாளர் நன்மதிப்புக்கள் மற்றும் சிறந்த வியாபார செயற்பாடுகள் போன்றவற்றினை அறிவூட்டுவதற்கு

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கனளயும் கருத்தரங்ளையும் வேலைப்பட்டறைகளையும் மற்றும் பாவனையாளர் தின நிகழ்ச்சித்திட்டங்களையும் பயன்படுத்தி வருகின்றது.

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், அதிகாரபையானது, பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சமூக அமைப்புக்கள், குடும்பத் தலைவிகள் மற்றும் பொது மக்கள் போன்ற பாவனையாளர் குழுக்களுக்கு 107 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள், தலமையலுவலகத்தினாலும் அவ்வாறே பாஅஅ இன் மாவட்ட அலுவலகங்களினாலும் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலாக, பாஅஅ ஆனது பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக கண்காட்சிகள் மற்றும் வர்த்தக சந்தைகக்கும் பங்களிப்பினை வழங்கியுள்ளது.

**அட்டவணை 5: 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பாவனையாளர் அறிவூட்டல் நடவடிக்கைகளின் விபரம்**

| **நிகழ்ச்சித்திட்டம்** | 2010 | | |
|---|---|---|---|
| | **நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றாளர்களின் எண்ணிக்கை** | **பாவனையாளர் நிறுவனங்கள்/பாடசாலை பாவனையாளர் சங்கங்களின் எண்ணிக்கை** |
| பொது மக்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 83 | 28,648 | - |
| பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 24 | 4,052 | - |
| வர்த்தகர்களுக்கான விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் | 152 | 8395 | - |
| பாவனையாளர் நிறுவனங்களை தாபித்தல் | 51 | - | 51 |
| பாடசாலை பாவனையாளர் சங்கங்களை தாபித்தல் | 03 | 1140 | 33 |
| மரக்கறிகள் மற்றும் பழங்களுக்குரிய கொள்கலன்களைப் பயன்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 98 | 6,846 | - |
| ஊடகத்தினூடான விளம்பரம்(அச்சு/இலத்திர | 69 | - | - |

| | | | |
|---|---|---|---|
| னியல்) (பத்திரிகையாளர் மாநாடும் விளம்பரமும்)) | | | |
| கண்காட்சிகள் | 02 | 312,000 | - |
| பொது மக்களுக்கு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்தல் | 08 | 15,400 | - |
| **மொத்தம்** | **490** | **376,531** | **84** |

### தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 2011/2012: அநுராதபுரம்

மேற்படி மாவட்டஙகளில் நடாத்தப்பட்ட விசேட விழிப்புணர்வு கருத்திட்டமானது பின்வரும் நிகழ்வுகளைக் கொண்டுள்ளது.

- அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- மாதிரி கடை போட்டி அமுலாக்கம்
- பாவனையாளர் அமைப்புக்கள் மற்றும் பாடசாலை பாவனையாளர் சங்கங்களை தாபித்தல்
- கண்காட்சி நிலையங்கள்

### (ஆ) விழிப்புணர்வு சார்ந்த விடயங்களை பிரசுரித்தல்

குறித்த ஆண்டு காலப்பகுதியில், அதிகாரபையானது விழிப்புணர்வு சார்ந்த பிரசுரங்களை சிங்கள, தமிழ், மற்றும் ஆங்கிலமொழிகளில் வெளியிட்டுள்ளது.

### (இ) பாவனையாளர் அமைப்புக்கள் மற்றும் பாடசாலை பாவனையாளர் மன்றங்களை தாபித்தல்

பாஅஅ ஆனது 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில், பாவனையாளர் சங்கங்களின் தாபித்தலினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுள்ளதுடன் 51 பாவனையாளர் அமைப்புக்களைத் தாபித்துள்ளதுடன் 1140 மாணவர்களின் பங்களிப்புடன் 33 பாடசாலை பாவனையாளர் மன்றங்களைத் தாபித்துள்ளது.

## (5) போட்டி நடவடிக்கைகளுக்கெதிராக பாவனையாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களை பாதுகாத்தலும் ஆரோக்கியமான போட்டியினை ஊக்குவித்தலும்

### (அ) போட்டி ஊக்குவிப்பு

போட்டியினை ஊக்குவிப்பதன் பிரதான நோக்கம் வியாபாரிகளுக்கடையே சுதந்திரமானதும் நியாயமானதுமான சந்தைக் கட்டமைப்பனை தாபிப்பதும் ஆராக்கிமானதும் நியாயமானதுமான போட்டியினை ஊக்குவிப்பதுமேயாகும். 2011 ஆண்டு காலப்பகுதியில் அடையப்பெற்ற போட்டி ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் முன்னேற்றம் அட்டவணை 6 இல் தரப்படுகின்றது.

**அட்டவணை: 6. போட்டி ஊக்குவிப்பு நடவடிக்கைளின் முன்னேற்றம்**

| நடவடிக்கை | முன்னேற்றம் |
|---|---|
| (அ).பொதுமக்களின் நலன்களுக்கெதராக தொழிற்படுகின்ற போட்டி எதிர் நடவடிக்கைளுக் கெதிராக தலையீடு செய்தல்.<br>போட்டி எதிர்செயற்பாடுகளின் சாத்தியப்பாட்டினை இனங்காண்பதற்கு சொந்தமாக சோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | 01 |
| (ஆ)போட்டி மற்றும் நியாயமற்ற வியாபார செயற்பாடுகள் குறித்து பாஅஅ க்கு மேற்கொள்ளப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் நுண்ணாய்வினை மேற்கொள்ளுதல் | 28 |
| (இ) சந்தைக் கட்டமைப்பினை இனங்காணுதலும் கையாழுதலும்<br>புள்ளிவிபர தரவு சேகரிப்பு மற்றும் சந்தை நிபந்தனைகள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. | 28 பொருட்கள் |
| (ஈ) சந்தை ஆராய்ச்சியும் பாதுகாப்பு வழிகளை பரிந்துரைத்தலும் | 06 |
| (உ) ஆரேக்கியமான போட்டி மற்றும் வர்த்தக பொறுப்புக்கள் தொடர்பான விழிப்புணர்வு | 09 |
| (ஊ)போட்டியை ஏற்படுத்துவதற்காக தொழிற்படுகின்ற துறைகளின் மட்டத்தினைப் பேணுதல்<br>2007/07/11 ஆம் திகதிய 1505/15 ஆம் இல.வர்த்தமானி அறிவித்தலின் கீழ் தற்போது அரசாங்க கொள்கை அமுலாக்கலுகாக ஐந்து பொருட்கள் இனங்காணப்பட்டுள்ளன. | 330 |

2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஹலால் உணவு சான்றுப்படுத்தல், பெயின்ற் கைத்தொழில் மற்றும் உணவுக்காக பயன்படுத்தப்படும் எண்ணெய் வகைகளின் விலை வேறுபாடு தொடர்பில் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. மருந்தாக்கல் சந்தைப்படுத்தலில் தற்போது காணப்படும் போட்டி, தற்போதைய சட்ட மற்றும் நிருவாக நடைமுறைகள் போன்றவை தொடர்பிலும் ஆய்வு செய்யப்பட்டதுடன் மருந்தாக்கல் சந்தைப்படுத்தலிலுள்ள பிரச்சனைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

சந்தை மதிப்பாய்வுகள் சீமெந்து, அரிசி, எல்பி எரிவாயு, கோதுமை மா மற்றும் பால் மா ஆகியவற்றின் சில்லறை விலைகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. கோழி இறைச்சிக்கான சந்தை கேள்வி, வழங்கல் மற்றும் விலை தொடர்பிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அத்தியாவசிய பொருட்களின் விலை தொடர்பில் 2008 இலிருந்து 2011 வரையில் ஒப்பீடு செய்யப்பட்டது.

வாழ்க்கைச் செலவு மற்றும் உணவு பாதுகாப்பு தொடர்பான அமைச்சரவை உப குழுவுக்கு தேவையான கொள்கைத் தீர்மானங்களைப் பெறும் பொருட்டு 25 உணவுப் பொருட்களின் நாளாந்த விலை வேறுபாடுகள் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படுகின்றது.
வியாபார உரிமையாண்மைகள் தொடர்பான தரவுத் தளமொன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## 6. நியாயமான விலையினை உறுதி செய்தல்

### (அ) விதித்துரைக்கப்பட்டபொருட்களின் விலை ஒழுங்கு விதி

பாஅஅ ஆனது, சட்டத்தின் 14,18,19 மற்றும் 20 ஆம் பிரிவுகளில் விதித்துரைக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்டபொருட்களின் சந்தை விலைகளில் தலையீடு செய்கின்றது. தெரிவுசெய்ய்பட்ட பொருட்களின் விலைளை நிலையாகப் பேணுவதற்கு/ நிர்ணயிப்பதற்கு பாஅஅ இனால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அட்டவணை 8 இல் தரப்பட்டுள்ளது.

| பொருட்கள் | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| சீமெந்து | தற்போதுள்ள சந்தை நிலபரங்ளைக் கருத்தில் கொண்டு வர்த்தமானி அறிவித்தலொன்றினை வழங்கியதன் மூலமாக சாதாரண போர்ட்லன்ட் சீமெந்து மற்றும் போர்ட்லன்ட சுண்ணாம்பு சீமெந்து ஆகிவற்றின் 50 கி.கி. பைக்கற்றக்களுக்கான விலையானது ரூபா 750/- இலிருந்து 785/- இற்கு அதிகரிப்பதற்கும் மேசன் வேலைகளுக்கான சீமெந்து ரூபா 735/- இலிருந்து 700/- இற்கும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| கோழி இறைச்சி | தோலுடன் கூடிய புரொயிலர் முழுக் கோழி இறைச்சியின் ஆகக்கூடிய சில்லறை விலை கிலோ கிராமொன்று ரூபா 320.00 இலிருந்து ரூபா 350.00 இல் நிர்ணயிக்கப்பட்டது. |
| பால் மா | அதிகாரபையானது பால் மா கம்பனிகளினால் விடுக்கப்பட்ட கோரிக்கையினைக் கருத்தில் கொண்டு சட்டத்தின் 20(5) ஆம் பிரிவின் கீழ் முழு ஆடைப்பால் மாவுக்கான ஆகக்கூடிய சில்லறை விலையினை மீள நிர்ணயித்துள்ளது. அதன்படி முழு ஆடைப்பால் மாவுக்கான ஆகக்கூடிய சில்லறை விலையானது 2011மே 02 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின்படி, பின்வருமாறு.<br>400 கி. முழு ஆடைப்பால் மா – ரூபா 244/- இலிருந்து ரூபா 264/-<br>1கி.கி முழு ஆடைப்பால் மா - ரூபா 598/- இலிருந்து ரூபா 647/- |
| அரிசி | அரிசியின் ஆகக்கூடிய சில்லறை விலையானது தற்போதைய மட்டத்திலிருந்து மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## திரவ பெற்றோலிய (எல்பி) எரிவாயு

திரவபெற்றோலிய சநதையானது 2 கம்பனிகளினால் தற்போது கையாளப்பட்டு வருவதுடன் விலையானது 2007 இன் பின்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட விலை வாய்பாட்டினூடாகவே தற்போதும் ஒழுமைக்கப்பட்டு வருகின்றது.

### அட்டவணை 9 : 12.5 கி.கி திரவ பெற்றோலிய எரிவாயுவுக்கான விலை நகர்வு - 2011

| மாதம் | 2011 | |
|---|---|---|
| | லிற்றோ எரிவாயு (ரூபா) | லாப் எரிவாயு (ரூபா) |
| ஜனவரி | 1,652 | 1,556 |
| மார்ச் | 1,652 | 2,029 |
| ஏப்பிரல் | 1,890 | 2,029 |
| மே | 1,890 | 1,947 |
| ஜீலை | 1,890 | 2,050 |
| ஆகஸ்ட் | 2,046 | 2,050 |
| டிசம்பர் | 2,046 | 2,046 |







**நிறுவனத்தின் திறன்களை விருத்திசெய்தல்**

**(அ) பதவியினர் விருத்தி**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது தனது சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு பங்களிப்பினை வழங்குகின்ற முதலீட்டு துறையில் அதன் உரிய துறைகளிலுள்ள பதவியினரை விருத்தி செய்வதில் அக்கறை கொள்கின்றது. 2011 இல் பதவியினர் பயிற்சியளித்தலின் விபரங்கள் அட்டவணை 10 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 10: பதவியினர் பயிற்சியளித்தல் - 2011

| | பாடநெறி தலைப்பு | பங்கு பற்றாளர்களின் எண்ணிக்கை | பங்கு பற்றாளர் ஒருவருக்கான பாடநெறிக்கட்டணம். | மொத்த முதலீடு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | பணிப்பாளர்கள், பிரதி பணிப்பாளர்கள் மற்றும் உதவி பணிப்பாளர்களுக்கான தமிழ் மொழி வகுப்புக்கள் | 10 | திருமதி.எஸ் திருநீலகண்டனினால் (பணிப்பாளர், போ.ஊ)நடாத்தப்பட்டது. | இலவசமாக |
| 2 | மாவட்ட அலுவலக புலனாய்வு உத்தியொகத்தர்களுக்கான த.தொ.பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டம் | 16 | | 28,000.00 |
| 3 | இலங்கை சட்டவாளர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட LAWASIA வியாபார சட்ட மாநாடு 2011. | 4 | 10,000x2 & 12,500x2 | 45,000 |
| 4 | E-Wis Career Training (Pvt) Ltd இல் நடாத்தப்பட்ட MS Access பயிற்சி | 25 | | 72,500.00 |
| 5 | கலாநிதி.புத்திக சோமவர்தனவினால் நடாத்தப்பட்ட "பெண்களின் ஆரோக்கியமும் குறிப்பாக பெண்களின் இனப் பெருக்க ஆரோக்கியம்" தொடர்பான கருத்தரங்கு | 28 | | இலவசமாக |
| 6 | வியாபார முகாமைத்துவத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட தொழில் வல்லுனர்களுக்கான ஆராய்ச்சி முறை | 1 | 12,500.00 | 12,500.00 |
| 7 | தேசிய உற்பத்திதிறன் செயலகத்தினால் நடாத்தப்பட்ட விவிசாய உணவு உற்பத்திகளின் சர்வதேச வர்த்தகம் தொடர்பான இலத்திரனியல் கற்றல் பாடநெறி | 4 | | இலவசமாக |
| 8 | இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வரிவிதிப்பின் நடைமுறை விடயங்கள் தொடர்பான விரிவான பாடநெறி | 2 | 18,000.00 | 36,000.00 |
| 9 | பிரதி பணிப்பாளர் ஏஎஸ்சி.சில்வாவுக்கான (உள்ளக கணக்காய்வாளர்) நல்லாட்சி மற்றும் சட்ட விதிகளினூடாக செயல் நிறைவேற்றத்தினை மேம்படுத்துதல் | 1 | 5,714.29 | 5,714.29 |
| 10 | போ.ஊ. பிரிவின் கனிஸ்ட நிறைவேற்றுனர் மற்றும் 2 புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கான கருத்தரங்கு | 3 | 3,500.00 | 10,500.00 |

| | பாடநெறி தலைப்பு | பங்கு பற்றாளர்களின் எண்ணிக்கை | பங்கு பற்றாளர் ஒருவருக்கான பாட நெறிக்கட்டணம். | மொத்த முதலீடு (ரூபா) |
|---|---|---|---|---|
| 11 | பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் செயலாளர் மற்றும் போ.ஊ.பணிப்பாளருக்கான தேசிய சட்ட மாநாடு 2011 | 2 | 7,500.00 | 15,000.00 |
| 12 | 03 புலனாய்வு உத்தியோகத்தர் களுக்கான முதலீட்டு பாடநெறிக்கான தொழில்நுட்ப சந்தை வாய்ப்பு | 3 | | இலவசமாக |
| 13 | முகாமைத்துவ உதவியாளர் திரு.பி.பி.சி.பி.நரங்கொட மூலமாக பங்குபற்றிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முகாமைத்துவ உள்ளடக்கத்திற்கான பயிற்சியளித்தல் | 1 | | இலவசமாக |
| 14 | திரு.ஜே.ஜி.ஆர்.டப்.அபேரத்ன (காசாளர்-நிதிப்பிரிவு 04 நாட்கள்)இனால் பங்குபற்றிய லிகிதர் திறன்விருத்தி வேலைப்பட்டறை) | 1 | 12,000.00 | 12,000.00 |
| 15 | பணிப்பாளர்(மனிதவள அபிவிருத்தி) பங்குபற்றியஒழுக்காற்று முகாமைத்துவத்தினூடான மனித வள அபிவிருத்தி | 1 | 7,500.00 | 7,500.00 |

## ஆ) அதிகாரசபையின் பதவியணி நிலையினை வலுவூட்டுதல்

பாஅஅ ஆனது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து 2011.05.19 ஆம் திகதியிலிருந்து பதவியணிக்கான அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

**அட்டவணை 11: 2011.12.31 இலுள்ளவாறான அதிகாரசபையின் பதவியணி நிலை**

| சம்பள குறியீடு | பதவி | 2011.3.31 இலுள்ளவாறான அங்கீகரித்த பதவியணி | 2011.12.31 இலள்ளவாறான பதவியணி நிலை | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| | **சிரேஸ்ட முகாமையாளர்** | | | |
| எச்எம் 2-1 | பணிப்பாளர் நாயகம் | 1 | 0 | 1 |
| எச்எம் 1-1 | பணிப்பாளர் | 6 | 5 | 1 |
| | பேரவை செயலாளர் | 0 | 1 | 1 |
| | **முகாமையாளர்** | | | |
| எம்எம் 1-1 | பிரதி பணிப்பாளர் | 16 | 3 | 9 |
| | உதவி பணிப்பாளர் | | 4 | |
| | **கனிஸ்ட முகமையாளர்** | | | |
| ஜேஎம் 1-1 | கணக்காய்வு உத்தியோகத்தர் | 2 | - | 2 |
| | முறைமை நெறிப்படுத்துனர் | 1 | 0 | 1 |
| | சிரேஸ்ட புலனாய்வு உத்தியோகத்தர் | 2 | - | 2 |
| | சிரேஸ்ட புள்ளிவிபர உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| | சிரேஸ்ட சந்தை ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| | சிரேஸ்ட கணக்கு உத்தியோகத்தர் | 2 | 2 | 0 |
| | அந்தரங்கசெயலாளர்(ப.நா) | 1 | 1 | 1 |
| | அந்தரங்க செயலாளர்(தவிசாளர்) | 1 | 1 | 1 |
| | சிரேஸ்ட நிருவாக/மனித வள உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| | சிரேஸ்ட சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் | 2 | 2 | 1 |
| | சிரேஸ்ட கிரய உத்தியோகத்தர் | 1 | 1 | 0 |
| | சிரேஸ்ட பாவனையாளர் வலுவூட்டல் உத்தியோகத்தர் | 2 | - | 2 |
| | அமுலாக்கல்தொழிற்பாட்டு/விரிவாக்கல் | | | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| எம்ஏ 5-2 | தரவு ஒருங்கிணைப்பாளர் | 1 | - | 1 |
| | புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் | 1 | - | 1 |
| | சந்தை ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் | 1 | - | 0 |
| | ஆவணப்படுத்தும் உத்தியோகத்தர் | 6 | 1 | 2 |
| | நூலகர் | 1 | - | |
| | கிரய உத்தியோகத்தர் | 15 | 1 | 10 |
| | கணக்கு உத்தியோகத்தர் | | 4 | |
| | நிருவாக உத்தியோகத்தர் | 5 | 1 | 4 |
| | சட்ட அமுலாக்கல் உத்தியோகத்தர் | 3 | 2 | 2 |
| | புலனாய்வு உத்தியோகத்தர் | 200 | 149 | 51 |
| | **தொழில்நுட்ப அறிவுடையோர்** | | | |
| எம்ஏ 2-2 | கணக்குப் பதிவாளர் | 1 | 0 | 1 |
| | **தொழில்நுட்ப அறிவில்லாதோர்** | | | |
| எம்ஏ 1-2 | முகாமைத்துவ உதவியாளர் | 31 | 25 | 6 |
| | **ஆரம்ப மட்ட திறன்விருத்தி பெற்றோர்** | | | |
| பிஎல் 3 | சாரதிகள் | 12 | 11 | 1 |
| | **ஆரம்ப மட்ட திறன்விருத்தி பெறாதோர்** | | | |
| பிஎல்1 | அலுவலக உதவியாளர்கள் | 14 | 12 | 2 |
| | மொத்தம் | **331** | **222** | **109** |

| | |
|---|---|
| மொத்த ஊழியர்கள் | 222 |
| *ஒப்பந்த / அமைய / நாட் கூலி | 14 |
| பாஅஅ இலுள்ளவாறான மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 31.12.2011 | **236** |

* பாஅஅ இன் பதவியினர் - ஒப்பந்த/அமைய/நாட் கூலி

| **பெயர்** | **நியமனங்களின் எண்ணிக்கை** | **ஒப்பந்த/நாள் கொடுப்பனவு** |
|---|---|---|
| கனிஸ்ட நிறைவேற்றுநர் | 1 | ஒப்பந்த அடிப்படை |
| முகாமைத்துவ உதவியாளர் | 7 | ஒப்பந்த அடிப்படை |
| சாரதி | 2 | ஒப்பந்த அடிப்படை |
| அலுவலக உதவியாளர் | 2 | நாள் கொடுப்பனவு |
| | 2 | ஒப்பந்த அடிப்படை |
| **மொத்தம்** | **14** | |

### (இ) பதவியினர் நலன்புரி

2011 ஆம் அண்டு காலப்பகுதியில், பதவியினரின் உற்பத்தி திறனினை மேம்படுத்தி அதன் மூலமாக அவர்களின் பங்களிப்பினை அதிகரிக்கும் நோக்குடன் பதவியினரின் வேலை செய்யும் அலுவலக சூழலினை அமைதியானதும் ஆற்றல் மிக்கதுமாக மாற்றியமைப்பதற்காக பல்வேறு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பதவியினர் அலுவலக வளாகத்திற்கு முன்பாக வெசாக் வெளிச்ச கூடுகளை அமைப்பதில் அமைச்சின் நோக்கல்லையின் கீழ் தொழிற்படுகின்ற ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து தமது பங்களிப்பினைச் செலுத்தியிருந்தார்கள். அமைச்சினால் நடாத்தப்பட்ட வெசாக் வெளிச்ச கூடுகளை தாபிக்கும் போட்டியில் அதிகாரசபை பதவியினரினால் தாபிக்கப்பட்ட வெ ளிச்சக் கூட்டுக்கு 2 ஆவது இடம் கிடைத்துள்ளது.

அத்துடன், பாஅஅ இன் பதவியினர் அமைச்சினால் அமைச்சின் நோக்கல்லையின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனங்களுக்கிடையில் ஏற்பாடு செய்யப்பட்ட வலைப்பந்து மற்றும் கிறிக்கற் போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தார்கள்.

### (ஈ) பாஅஅ சட்டத்திற்கான திருத்தங்கள்

பாஅஅ ஆனது பாஅஅ சட்டத்தின் உத்தேச திருத்தங்கள் தொடர்பில் சட்ட வரைஞர் அலுவலகத்துடனும் சட்டமா அதிபர் திணைக்களத்துடனும் நெருங்கிய தொடர்புகளை பேணி வருகின்றது.

### பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் செயல்நிறைவேற்றம்.

பானையாளர் அலுவுலகள் பேரவையின் நிருவாக செயற்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதிகாரசபையினால் குறிப்பீடு செய்யப்படுகின்ற, பிரதானமாக போட்டி எதிர் செயற்பாடுகள் தொடர்பில் அதிகாரசபையினால் குறிப்பீடு செய்யப்படுபவன தொடர்பில் கேட்பதற்கும் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் சட்டத்தினால் தத்துவமளிக்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, மிகை விலையிடல், முறையற்ற சந்தை செயற்பாடுகள் மற்றும் சந்தை கையாளல் என்பன விசாரணைக்காக பேரவைக்கு குறிப்பீடு செய்யப்படுகின்றன. தேவைப்படுமிடத்து பேரவையானது ஆகக்கூடிய விற்பனை செய்யப்படவுள்ள அல்லது வழங்கப்படவுள்ள சேவைகளின் விலைகளை நிர்ணயிப்பதற்கான பரிந்துரையினை செய்வதற்கு தத்துவளிக்கப்பட்டுள்ளது.

2011 ஆண்டு காலப்பகுதியில், வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு பாவனையாளர் பேரவையினால் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரபை சட்டத்தின் பிரிவு 20(4) இன் பிரிவின் நியதிகளின்படி, முழு ஆடைப்பால்மா மற்றும் சீமெந்து மற்றும் என்பற்றின் விலைகளை தீர்மானிப்பது தொடர்பில் அதிகாரசபைக்கு பரிந்துரை செய்யபட்டுள்ளது. பேரவையானது, மருந்தாக்கல் மற்றும் வளமாக்கிகளுக்கான விலையிடல் தொடர்பிலும் ஆய்வுகளை நடாத்தியுள்ளது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில், போட்டி எதிர் நடவடிக்கைகள் தொடர்பான 02 முறைப்பாடுகளை புலனாய்வு செய்துள்ளதுடன் அவற்றுள ஒன்றினைப் பூர்த்தி செய்துள்ளது. அத்துடன் நியாயமற்ற வர்த்தக செயற்பாடுகள் தொடர்பான ஒரு முறைப்பாட்டினையும் கையாண்டுள்ளதுடன் அதனை நிறைவும் செய்துள்ளது.

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## 2011, டிசம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலை

| | 2011<br>ரூ.000 | 2011<br>ரூ.000 | 2010<br>ரூ.000 | 2010<br>ரூ.000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி | 29,798 | | 29,713 | |
| முதலீடுகள் (நீகா) | 74,420 | | 52,992 | |
| ஊழியர்கடன் (நீகா) | 10,392 | | 10,277 | |
| | | 114,610 | | 92,982 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| கையிருப்புக்கள்/இருப்புக்கள் | 1,168 | | 446 | |
| வர்த்தக மற்றும் ஏனைய பெறத்தக்கவைகள் | 24,695 | | 13,725 | |
| அரசாங்க கடன்பட்டோர்கள் | 21,838 | | 21,838 | |
| காசும் காசுக்கு சமமானவையும் | 23,520 | | 39,448 | |
| | | 71,221 | - | 75,457 |
| **மொத்த சொத்துக்கள்** | | **185,831** | | **168,439** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| **நடைமுறைப்பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்தத் தக்கவைகள் (அட் V) | 4,608 | | 1,892 | |
| சேர்ந்த செலவுகள் (அட் x) | 17,312 | | 15,704 | |
| | | 21,920 | | 17,596 |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் (அட் xi) | 14,127 | | 11,565 | |
| | | 14,127 | | 11,565 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **36,045** | | **29,161** |
| **மொத்த தேறிய சொத்து** | | **149,785** | | **139,278** |
| **தேறிய சொத்து உரிமை** | | | | |
| திரண்டு நிதி | 63,191 | | 63,191 | |
| நீடித்த வருமானம் | 35,409 | | 37,520 | |
| ஒதுக்கங்கள் | 51,185 | | 38,567 | |
| | | **149,785** | | **139,278** |
| **மொத்த தேறிய சொத்து/ உரிமை** | | **149,785** | | **139,278** |

.....................................

நிதி பணிப்பாளர்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

.....................................

தவிசாளர்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

.....................................

பணிப்பாளர் நாயகம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை
## 2011, டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயல் நிறைவேற்று அறிக்கை

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூ.000' | ரூ.000' |
| **தொழிற்பாட்டு வருமானம்** | | |
| மீண்டுவரும் மானியம் | 161,629 | 143,029 |
| ஏனைய வருமானம் | 30,850 | 9,802 |
| | 14,807 | 9,854 |
| | 207,286 | 162,685 |
| **தொழிற்பாட்டு செலவுகள்** | | |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 108,345 | 85,944 |
| பயணச் செலவுகள் | 9,230 | 2,998 |
| வழங்கல்களும் நுகர்வுக்கு பயன்படுத்தியவையும் | 7,598 | 5,638 |
| பேணுதல் | 3,108 | 5,774 |
| ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள் | 36,148 | 18,831 |
| தேய்மானம் | 8,060 | 6,306 |
| ஏனைய தொழிற்பாட்டு செலவுகள் | 22,095 | 15,411 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவுகள்** | 194,585 | 140,904 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான மிகை/ (பற்றாக்குறை)** | 12,702 | 21,781 |
| | - | |
| நிதிச் செலவு | 84 | 57 |
| மொத்த தொழிற்பாடல்லாத செலவுகள் | 84 | 57 |
| அசாதாரண உருப்படிகளுக்கு முன்னரான தேறிய மிகை/(பற்றாக்குறை) | 12,618 | 21,723 |
| சொத்துகக்ளின் விறபனை இலாபம் | | 40 |
| **குறித்த ஆண்டுக்கான தேறிய மிகை/(பற்றாக்குறை)** | 12,618 | 21,763 |

## பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

## 2011 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா 000' | ரூபா 000' |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| சாதாரண நடவடிக்கைகளிலிருந்தான மிகை/(பற்றாக்குறை) | 12,618 | 21,723 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 8,061 | 6,306 |
| பணிக்கொடை ஏற்பாட்டில் அதிகரிப்பு | 2,562 | 2,039 |
| | 25 | - |
| **தொழிற்படு மூலதன நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | 23,266 | 30,068 |
| செலுத்தத் தக்கவைகளில் அதிகரிப்பு-குறிப்பு 1 | 4.324 | 5,406 |
| ஏனைய நடைமுறைச்சொத்துக்களில் குறிப்பு 11 | (11,692) | (2,471) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **15,898** | **33,003** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| மீள் பெறுமதி மதிப்பீடு | (8,172) | (4,627) |
| | - | 435 |
| பொறி, உபகரண விற்பனையிலிருந்தான சம்பாத்தியங்கள் | (21,428) | (7,105) |
| முதலீடுகளில் அதிகரிப்பு | (115) | (2,112) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(29,715)** | **(13,409)** |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| நீடித்த வருமானம் | (2,111) | 10,794 |
| பாவனையாளர் பாதுகாப்பு நிதி | - | - |
| மீள் மதபபீட்டு மிகை | - | (10,622) |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்** | **(2,111)** | **172** |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ (குறைப்பு)** | (15,928) | 19,766 |
| **காலப்பகுதியின் ஆரம்பத்திலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | 39,448 | 19,682 |
| **காலப்பகுதியின் இறுதியிலுள்ள காசும் காசுக்கு சமமானவையும்** | **23,520** | **39,448** |

# கணக்குகளுக்குரிய குறிப்புக்கள்

## 1. ஒருங்கிணைந்த தகவல்

1.1.1 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது (பாஅஅ) 1979 ஆம் அண்டின் 1 ஆம் இல. பாவனையாளர் பாதுகாப்பு சட்டம், 1987 ஆம் ஆண்டின் நியாய வியாபார ஆணைக்குழு சட்டம் மற்றும் விலைக்கட்டுப்பாட்டு சட்டம் (அத்தியாயம் 173) ஆகியவற்றினை இரத்துச் செய்து 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதாகும். திறைசேரி சுற்றுநிரூப இல.பீஈடி/55/02 திகதி 15/9/2011 இல் பாஅஅ "ஏ" நிரல் தாபனமாக தரப்பட்டுள்ளது.

### 1.1.2 முதன்மை செயற்பாடுகளும் தொழிற்பாட்டின் தன்மையும்

அதிகாரசபையின் முதன்மை செயற்பாடு பாவனையாளர்களையும் வியாபார ஒழுங்கு விதிகளையும் பாதுகாப்பதேயாகும்.

1.1.3 2011 ஆம் ஆண்டின் இறுதியில் அதிகாரசபையின் ஊழியர்களின் எண்ணிக்கை 235 ஆகும்.

## 1.4 பங்கு/உரிமை வகித்தலின் முக்கியத்துவம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு முழுமையாக திறைசேரியினால் நிதியளிக்கப்படுகின்றது. நிதியின் தேறிய மீதியானது அதிகாரசபையின் நேரடி வருமானமாக இருக்கின்ற தண்டப்பண வருமானத்தின் 1/3 பங்கு மூலமாக நிதியளிக்கப்படுவதுடன் அதிகாரசபையின் உரிமையினையும் இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**1.5** திறைசேரியின் 2005.06.24 ஆம் திகதிய ரிஓ/ஐஎஸ்டி/3/பிஈ/2005 ஆம் இல. கடிதத்திற்கமைய திறைசேரியினால் 2005 ஆம் ஆண்டுக்கான அரசாங்க கடன்பட்டோர் கணக்கின் கிழ் காட்டப்பட்டிருந்தது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் சார்பில் வரிசை அமைச்சினால் பாஅஅ பாதுகாப்பு நிதியத்திற்கு இத்தொகையினை விடுவிக்குமாறு திறைசேரிக்கு பல ஞாபகமூட்டல்கள் விடுக்கப்பட்டிருந்தன.

**1.6** சொத்துக்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள் மற்றும் நியாயமான பெறுமதியிலான சொத்துக்களுடன் தொடர்புடைய அரசாங்க மானியங்கள் மற்றும் நியாயமான பெறுமதியிலான பணம் சாராத மானியங்கள் ஆகியன ஐந்தொகையில் நீடித்த வருமானமாக காட்டப்பட்டுள்ளது.

## 2. பொதுவான கணக்கீட்டு கொள்கைகள்

### 2.1 இணக்க கூற்று

ஐந்தொகை, தொடர்புடைய வருமான மற்றும் செலவினக் கூற்றுக்கள், காசுப் பாய்ச்சல் கூற்று, கணக்கீட்டு கொளகைகள் மற்றும் கணக்குக்கான குறிப்புக்கள் என்பன அரசாங்க துறை கணக்கிட்டு நியமங்களுக்கு மேலாக இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாகவும் தயாரிக்கப்படுகின்றன.

### 2.2 தயாரிப்பு அடிப்படை

நிதிசார் கூற்றுக்கள் வரலாற்று கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 2.3 ஒப்பீட்டு அடிப்படை

2.3.1 பிரிவு 2.4 உடன் முழுமையாக ஆராயப்பட்டு கணக்கீட்டு கொள்கைகளில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்ந்த கணக்கீட்டு கொள்கைகள் அதிகாரசபையினால் நிலையாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

2.3.2 2010 ஆம் ஆண்டின் தகவல்களுடன் ஒப்பீடு செய்து 2011 ஆம் ஆண்டின் தண்டப்பண வருமானங்களுக்கான கணக்கீட்டு முறையானது திருத்தப்பட்டது.

### 2.4 தண்டப்பணம் அறவீடு செய்தல்

#### 2.4.1 சேர்ந்த செலவுகள்

உரிய செலவின கணக்குகளுக்கான சேர்ந்த செலவின ஏற்பாடுகளை சீராக்குவதற்குப் பதிலாக அதிகாரசபையானது 2011 ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய ஒதுக்கங்களுக்கான ஏற்பாட்டு கணக்கினை (முன்னைய ஆண்டு)சீராக்கியுள்ளது.

#### 2.4.2 தண்டப்பண வருமானம்

வருமான சம்பாத்தியங்கள் முன்னதாக வருமானக் கூற்றிலிருந்து விலக்கப்பட்டிருப்பதால் அவை அதிகாரசபையின் பொதுவான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. 2011 இல் அதிகாரசபையானது, பொது திறைசேரியிடமிருந்தான விசேட அங்கீகாரத்துடன் அதிகாரசபைக்கான காப்புறுதி திட்டமொன்றிற்குப் பயன்படுத்தியுள்ளது. ஆகையால், 2011 இல், தண்டப்பண வருமானமானது வருமானமாக கருதப்பட்டு அனைத்து தொடர்புடைய செலவுகள் மற்றும் தண்டப்பணங்களுக்கான வருமானங்கள் என்பன வருமான செலவின கணக்கில் காட்டப்பட்டுள்ளன. மேலும், நிதியின் தேறிய தொகையானது குறிப்பாக தனியாக காட்டப்பட்டுள்ளது.

2.4.3 சில சமயங்களில் அதுகாரசபையானது தண்டப் பணங்களாக பணத்தினைப் பெறுகின்றதுடன் உரிய திடீர் சோதனை மேற்கொள்ளும் உத்தியொகத்தர்களினால் வழங்கப்படும் வழக்கு இலக்கங்களுக்கும் உரிய நீதிமன்றங்களுக்கு வழங்கப்படும் வழக்கு இலக்கங்களுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதன் காரணமாக அந்நேரத்தில் அவை அங்கீகரிக்கப்படாதவையாகவும் உள்ளன. அவை சாதாரணமாக அதிகாரசபைக்கு உரியவையாக இருந்த போதிலும் அல்லது அவை தவறுதலாக நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்தும் நோக்குடன் தண்டப்பண வருமான தொங்கல் கணக்கிற்கு மாற்றப்படுகின்றன. அத்தகைய பணமானது குறித்த ஆண்டினுள் அங்கீகரிக்கப்படாதவிடத்து அவை அதிகாரசபையின் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பிலிடப்படும்.

## 2.5 நிதியாண்டு

அதிகாரசபையின் நிதியாண்டு டிசம்பர் 31 இல் முடிவடையும் கலண்டர் ஆண்டாகும்.

## 3. சொத்து அடிப்படைகளும் அவற்றின் பெறுமதி மதிப்பீடும்.

### 3.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

**3.1.1** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன செலவு குறைந்த திரண்ட தேய்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3.1.2** பொறி மற்றும் பொறித்தொகுதியின் கொள்விலையானது அவற்றினைப் பயன்படுத்தும் நோக்கத்திற்காக தொழிற்படுநிலைக்கு கொண்டு வருவதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செலவுகளுடனான கொள்வனவு அல்லது நிருமாண செலவுகளையும் கொண்டிருக்கும்.

**3.1.3** நிரந்தர தன்மையினையுடைய சொத்துக்களின் கொள்ளல், விரிவாக்கல் அல்லது மேம்படுத்தல் நோக்கத்திற்காக ஏற்பட்ட செலவு அதாவது வியாபாரத்தினை நடாத்துவதற்கு அல்லது சொத்துக்களின் ஆயுட்காலத்தினை அதிகரிப்பத்றகு ஏற்பட்ட செலவுகள் என்பன மூலதன செலவினமாக கருதப்படும்.

**3.1.4** வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல.150 இன் நியதிகளின்படி, 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஐந்து வாகனங்கள் (நான்கு ரொஜோட்டா ஹயஸ் வான்கள் மற்றும் ஒரு ரொயோட்டா கார்) பாஅஅ இன் வாகன அணிக்கு சேர்க்கப்பட்டன.

### 3.2 தேய்மானம்

அதற்கிணங்க, 2010 ஜனவரி 1 ஆம் திகதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் அச்சொத்தின் பயன்பாட்டுக்குரிய மாதத்திலிருந்து ஆரம்பிக்கும் வகையில் அதிகாரசபையினால் தேய்மானம் அளிக்கப்படுகின்றது.

3.2.1 ஆதனம், பொறி மற்றும் எபகரணங்கள் பதிவளிக்கப்பட்டவாறு அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலத்தில் நேர் கோட்டு அடிப்படையில் பின்வரும் வீதாசாரங்களில் அளிக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| அலுவலக தளபாடங்களும் பொருத்துக்க்ளும். | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| கணனி உபகரணம் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| அலுவலக பிரிவிடங்கள் | 20% |
| நுகர முடியாதவை | 10% |

3.2.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது நேர்கோட்டு முறையிலேயே தேய்மானத்தினைக் கணப்பிடுகின்றது.

3.2.3 நூலக நூல்களுக்கு தேய்மானமளிக்கப்படுவதில்லை.

3.2.4 குறித்த ஆண்டுடன் தொடர்புடைய தேய்மானப் பெறுமதியானது நீடித்த வருமானக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது.

3.3 கட்டிடம் – குருநாகல்

குருநாகல் மாவட்ட பாஅஅ அலுவலகத்திற்கென குருநாகல் மாவட்ட செயலாளரினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள கட்டிடத்திற்கான ரூபா 1 மில்லியன் கொடுப்பனவு 40 வருடங்களுக்கு பாவனைக்காக மதிப்பிடப்பட்டுள்ளது.

## 3.4 கடன்பட்டோரும் பெறத்தக்கவைகளும்

கடன்பட்டோரும் பெறத்தக்கவைகளும் அவை தேறத்தக்கதாக மதிப்பிடப்பட்ட தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

3.5 கையிருப்புக்கள் குறைந்த கிரயத்தில் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடூ செய்யப்படுகின்றன.

## 3.6 காசும் காசுக்கு சமமானவையும்

காசும் காசுக்கு சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள காசு மற்றும் குறுங்கால முதலீடு என வரையறுக்கப்படுகின்றது.

3.6.1 காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கங்களுக்காக, காசு மற்றும் காசுக்கு சமமானவை கையிலுள்ள காசு மற்றும் வங்கிகளிலுள்ள வைப்புக்களினைக் கொண்டுள்ளன.

## 4. பொறுப்புக்களும் எற்பாடுகளும்

### 4.1 செலுத்தத்தக்கவைகள்

செலுத்தத்தக்கவைகள் அவற்றின் கொள்விலையில் குறிப்பீடு செய்யப்படுகின்றன.

### 4.2 இழைப்பாற்று பயன் கடப்பாடுகள்

#### 4.2.1 வரையறுத்த பயன்திட்ட பணிக்கொடை

பணிக்கொடையானது ஓர் வரையறுத்த நலத்திட்டமாகும். அதிகாரசபையானது உரிய சட்டத்தின் நியதிகளின்படி, பணக்கொடையினைச் செலுத்துவதற்கு உரித்துடையது. இப்பொறுப்பினை அடையும் பொருட்டு சேவையின் முதலாண்டிலிருந்து ஆரம்பமாகும் ஒவ்வொரு பூர்த்தி செய்யப்பட்ட வேலையாண்டுக்கான அனைத்து ஊழியர்களின் நிதியாண்டின் இறுதி மாத சம்பளத்தின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட தொகைக்கு சம்மாக ஐந்தொகையில் ஏற்பாடொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் முன்கொண்டு செல்லப்படும் ஏற்பாடுகளுக்கும் ஆண்டின் இறுதியில் முன்கொண்டு செல்லப்படும் ஏற்பாட்டிற்கும் இடையிலான வேறுபாடு, வருமானக் கூற்றுடன் கையாளப்படுகின்றது.

இகநி 16 இன் நியதிகளிபடி, ஆகக்குறைந்தது ஒரு வருடத்தினை நிறைவு செய்த ஊழியர்களுக்கே பணிக்கொடை ஏற்பாடு கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பாஅஅ ஆனது திறைசேரியினால் நிதியானது முற்பணமாக விடுவிக்கப்படாத்திலிருந்து பணிக்கொடை திட்ட ஆதரவு நிதியெதிலும் முதலீடு செய்திருக்கவில்லை.

#### 4.2.2 வரையறுத்த பங்களிப்புத் திட்டங்கள்/ ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

அனைத்து ஊழியர்களும் உரிய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய ஊசேநி மற்றும் ஊநநி க்கும் பங்களிப்பு செய்ய தகுதியுடையவர்களாவர். அளிக்கப்பட்ட நிதியத்திற்கான பங்களிப்பு மற்றும் ஊழியர்களைக் கொண்டுள்ள நம்பிக்கை நிதியம் என்பன வருமானக் கூற்றில் செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அதிகாரசபையானது, ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றிற்கு ஊழியரின் மொத்த வேதனத்தின் முறையே 15% மற்றும் 3% இனை வழங்குகின்றது.

## 4.3. எதிர்பாராத பொறுப்புக்கள்

### செல் காஸ் கம்பனி (தனியார்) லிமிட்டட் – வழக்குத் தீர்ப்பு

**4.3.1** அரசாங்கமானது செல் காஸ் கம்பனி (தனியார்) லிமிட்டடினை பொறுப்பேற்றுள்ளதுடன் கம்பனியின் பெயரை லிற்றோ காஸ் கம்பனி லிமிட்டட் என மாற்றியுள்ளது. இதனால் கம்பனியின் தகுதியானது அரச அமைப்பாக மாற்றம் பெற்றுள்ளது. லிற்றோ கம்பனியானது அதன் கடிதத்தின் மூலம் வழக்குத் தீர்ப்பினை முன்னெடுக்க விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் தற்போது அது தீர்க்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடு 2011 ஆம் ஆண்டுக்கான சில்லறை வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

**4.3.2** ரூபா 67,913.10 பெறுமதியுடைய விசாரணையானது நடைபெற்றுவருவதுடன் தீர்மானமானது 2011/12/31 இலுள்ளவாறு நிலுவையிலுள்ளது.

## 5. வருமானம்

குற்றப்பண வருமானமானது திரண்ட அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**6.** மூலதனமாக்கப்பட்டுள்ள தனிப்பட்ட வழங்குகைகள் தவிர்ந்த ரூபா.1000.00 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்கள் ஒரு வருடத்திற்கு மேலான பயன்பாட்டினைக் கொண்டிருப்பதாக கருதப்படுகின்றது. நிலையான சொத்துக்கள் உள்நாட்டு வியாபார திணைக்களத்திலிருந்து பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்கள் நீங்கலாக இறக்குமதி வருகள் மற்றும் ஏனைய நேரடி செலவுகள் என்பன உள்ளடங்கலான திரண்ட விலையில் மதிப்பிடப்பட்டுள்ளன.

**7.** மூலதன நிதியங்களின் நாணயப் பெறுமதியானது குறித்த ஆண்டுக்காக திறைசேரியினால் முழுமையாக விடுவிக்கப்பட்டுள்ளதுடன் திரண்ட நிதியத்தின் கீழ் மூலதன மானிய ஒதுக்கமாக காட்டப்பட்டவாறு ஆண்டின் இறுதியில் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>MyNo. | கச/ஈ/சீஏஏ/எப்ஏ/2011 | ඔබේ අංකය<br>உமது இல<br>No. | | දිනය<br>திகதி<br>Date | 2013 ஜனவரி 28 |

தலைவர்,
நுகர்வோர் விவகார அதிகாரசபை

**நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் மீது 1971 ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்றுக்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்கள் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 50(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதியதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதியதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதொரு அறிக்கை அதிகார சபையின் தலைவருக்கு 2012 செப்தெம்பர் 20 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அல்லாத நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி 2887028 - 34
ෆැක්ස් අංකය / பெக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிசார் கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்த நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 24 இற்கமைய சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் மானியம் வருமானத்தில் கணக்கிடப்படும் போது பிற்போட்ட வருமானக் கணக்கு மீதியானது அரசாங்க மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களது தேறிய பெறுமதிக்குச் சமமாக அமைய வேண்டுமாயினும், நிதிக்கூற்றுக்களில் சுட்டிக்காட்டப்பட்ட பிற்போட்ட வருமானம் ரூபா 35,351,536 ஆகவிருந்தபோதும், சொத்துக்களின் தேறிய பெறுமதி ரூபா 28,742,326 ஆகியமையால் ரூபா 6,609,210 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அதிகாரசபை 2012 பெப்ரவரி 28 ஆந் திகதியன்று வரைவு நிதிக்கூற்றுக்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்தது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளுக்கான ரூபா 6,410,195 சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர், 2012 ஆகஸ்ட் 20 ஆந் திகதியன்று அதிகாரசபை நிதிக்கூற்றுக்களை மீளத் தயாரித்துச் சமர்ப்பித்திருந்தது. ஆகவே அவ்வாறான கணக்கீட்டுக் குறைபாடுகள் தொடர்ந்தும் இராமையை கணக்காய்வின் போது தவிர்க்க முடியாதுள்ளது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரச்சட்டம் | |
| (i) 3(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் அங்கத்தவர்கள் குறித்த துறைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தகமைகள், அனுபவம், புலமை என்பவற்றைக் கொண்டவர்களாக இருக்க வேண்டுமாயினும், 2011 ஆம் ஆண்டில் குறித்த தகமைகளைப் பெற்றிராத 8 பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) 27 ஆம் பிரிவு | நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் விசாரித்துத் தீர்மானம் செய்யும் ரூபா 100,000 க்கு மேற்படாத வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் சகல வர்த்தகர்களும் அதிகார சபையில் பதிவு செய்யப்பட வேண்டும். எனினும், இதுவரை வர்த்தகர் எவரையும் பதிவு செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 2011 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 4(2) ஆம் பிரிவினது உப விதிகள் | 2012 ஜனவரி 17 ஆந் திகதியன்று கொடுப்பனவு செய்யப்பட்ட 2010 ஆம் ஆண்டினது மருத்துவ லீவுச் சேமிப்புக் கொடுப்பனவு தொடர்பாக அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய வரி அட்டவணை 02 இன் படி கணிப்பிடப்பட்ட உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்படவில்லை. |

| | |
|---|---|
| **(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| (i) நி.பி 133 மற்றும் 134 என்பன | புதிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் தொடர்புடைய கணக்காய்வு நடவடிக்கைகளை நிறைவேற்றுதல் என்பவற்றிக்குப் போதிய பதவியணியினரை ஈடுபடுத்துதல், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும் எனினும், தொடர்புடைய நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு உள்ளகக் கணக்காய்வாளரை விட போதிய பதவியணியினர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371 (2) (ஆ) | ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக்கூடிய ஆகக் கூடிய இடைக்கால கட்டுநிதி ரூபா 20,000 ஆகும். எனினும், பிரமாணங்களுக்கு முரணாக, அவ்வரம்பை மீறி 2011 ஆம் ஆண்டின் போது 40 சந்தர்ப்பங்களில் இடைக்காலக் கட்டுநிதியாக ரூபா 2,940,800 வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) நி.பி 371 (5) | வழங்கப்பட்ட இடைக்காலக் கட்டுநிதி நிதியாண்டின் திசெம்பர் 31 க்கு முன்னர் திருப்பியளிக்கப்பட வேண்டுமாயினும், அத் தினத்தில் உள்ளவாறு இடைக்காலக் கட்டுநிதியாகிய ரூபா 852,600 தீர்த்து வைக்கப்படாதிருந்தது. |
| (ஈ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 8.3.4 ஆம் பந்தி மற்றும் 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய பீஎப்/எப்எஸ்/05/(viii) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தும் தொலைபேசி மற்றும் இணையதள வசதிகள் சம்பந்தமாக அதிகூடிய மாதாந்த ஒருங்கிணைந்த செலவின வரம்பு கடைப்பிடிக்கப்பட வேண்டுமாயினும், அதிகாரசபையின் 6 உத்தியோகத்தர்களுக்கு அவ்வரம்பை மீறிச் செலவழிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | 8.3.5 ஆம் பந்தி மற்றும் 1999 ஒக்டோபர் 01 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | "சீ" வகுப்பு நிறுவனங்களில் தலைவர் பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தர், நிறைவேற்றுதரப் பணிப்பாளர் ஆகியோருக்கு மாத்திரமே வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படலாம். எனினும், சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்தல்களுக்கு முரணாக, சுற்றறிக்கைக்கு உட்படாத அதிகார சபையின் 4 பணிப்பாளர்களுக்கும் நுகர்வோர் மன்றச் செயலாளருக்கும் ரூபா 43,000 மற்றும் பிரதி உதவிப் பணிப்பாளர்களுக்கு ரூபா 7,500 என மாதாந்த போக்குவரத்துப்படி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த போக்குவரத்துப்படி ரூபா 3,025,500 ஆகும். |
| (iii) | 9.3.1 ஆம் பந்தி | குறிப்பிடப்பட முடியாத கால எல்லைக்கு பதில் கடமையாற்றும் பதவிகளின் வாயிலாக வெற்றிடங்கள் நிரப்பப்படலாகாது. எனினும், சுற்றறிக்கையிலுள்ள அறிவுறுத்துரைக்கு முரணாக அதிகாரசபையின் 8 உத்தியோகத்தர்கள் 3 தொடக்கம் 22 மாதங்கள் வரையான காலப்பகுதியின் போது பதில் கடமையாற்ற/கடமைகளை நிறைவேற்றுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (iv) | 9.2 மற்றும் 9.3.1 (i) ஆம் பந்திகள் மற்றும் 2010 பெப்ரவரி 08 ஆந் திகதிய டீஎம்எஸ்/ச4/41/5/255/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களக் கடிதம் | சகல நிறுவனங்களுக்கும் பொது முகாமைத்துவத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இருக்க வேண்டும். எனினும், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது அதிகாரசபை ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு என்பவற்றை வழங்கியிருந்தது. |
| (v) | 9.10 ஆம் பந்தி | ஒப்பந்த, சமயாசமய, ஏனைய ஆட்சேர்ப்பு என்பன திறைசேரியின் செயலாளரது அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது 20 ஊழியர்களைச் சேவையிலமர்த்தி ரூபா 4,720,678 சம்பளமும் படியுமாக செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2010 திசெம்பர் 7 ஆந் திகதிய 150 ஆம் இலக்க வரவு, செலவுத் திட்டச் சுற்றறிக்கை மற்றும் 2003 மார்ச் 28 ஆந் திகதிய எம்எப்/டீஆர்/1/2003 ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் கடிதம் | வாடகை வாகனங்களைப் பயன்படுத்தும் அரச நிறுவனங்கள் வாடகைக் கொள்வனவு அடிப்படையில் வாகனங்களைப் பெறுவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எனினும், சுற்றறிக்கைக்கு முரணாக, அதிகார சபை வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் வாகனங்களுக்கு வாடகையாக ரூபா 14,692,581 செலுத்தியுமிருந்தது. 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 538 சதவீத அதிகரிப்பாகும். |
| ஊ) | 2010 செப்தெம்பர் 20 ஆந் திகதிய சீஏஏ/எஎச்ஆர்/74/2010 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் குறிப்பு | புதிய ஊடக இணையதளமாக டயலொக் தொலைபேசியை அறிமுகஞ் செய்வதன் மூலம் அதிகாரசபையின் மாதாந்த தொலைபேசிக் கட்டணத்தை 30 சதவீதத்தால் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், 2010 ஆம் ஆண்டின் ரூபா 1,243,003 தொலைபேசிச் செலவினம் மீளாய்வாண்டில் ரூபா 2,289,205 ஆகியமையால் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84 சதவீதத்தால் அதாவது ரூபா 1,046,202 அதிகரித்திருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான அதிகார சபையின் செயற்பாடுகளால் விளைந்த மிகை ரூபா 12,618,138 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,763,716 ஆகும். இதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 9,145,578 குறைவு தென்பட்டது. ஆளுக்குரிய வேதனம், ஒப்பந்தச் சேவைகள் மற்றும் பிற செயற்பாட்டுச் செலவினங்களில் அதிகரிப்பு அதற்குப் பிரதான காரணிகளாக அமைந்தன. மேலும் அதிகார சபையின் முன்னைய ஆண்டினது செயற்பாட்டுச் செலவினம் ரூபா 140,960,486 ஆகிய போதும் மீளாய்வாண்டின் போது அது ரூபா 194,667,564 ஆகியமையால் ரூபா 53,707,078 அதாவது, 38.1% செலவின அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயற்திறன்

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் கீழ் நுகர்வோர் விவகார மன்றம் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அதிகாரச் சட்டத்தின் 41(3) ஆம் பிரிவின் பிரகாரம் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு அதிகாரச் சட்டத்தின் 37 ஆம் 38 ஆம் பிரிவுகளின் கீழ் மன்றத்திடம் கோரிக்கை விடுவிக்கப்படும் போது அக்கோரிக்கை கிடைக்கப் பெற்று ஒரு மாதத்திற்குள் அது தொடர்பாகத் தீர்மானம் மேற்கொள்வது மன்றத்தின் பணியாகும். எனினும், அதற்கு முரணாக 2010 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் 2011 ஆம் ஆண்டில் ஒரேயொரு கோரிக்கையே பெறப்பட்டதாகவும் கணக்காய்விற்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மன்றத்தின் பொருட்டு 2011 ஆம் ஆண்டிற்கெனச் செலவிடப்பட்ட தொகை ரூபா 2,464,925 ஆகும்.

(ஆ) 2011 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 1728/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட 37 வகைப் பொருட்களுக்கு பிளாஸ்டிக் மற்றும் கடதாசி அல்லது மரத்தாலான உறைகள் பயன்படுத்தப்பட வேண்டுமெனும் கட்டளை 2012 ஜனவரி 13 ஆந் திகதிய 1740/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் 21 வகைப் பொருட்களாக குறைக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளுக்காக அதிகார சபையும் அமைச்சும் முறையே ரூபா 673,348 மற்றும் ரூபா 18,017,340 எனச் செலவிட்டிருந்தன. தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான செலவினத்திற்கு ஈடாகும் விதத்தில் நலன் கிடைக்கப்பெற்றதற்கான சான்று இருக்கவில்லை.

(இ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகார சபையின் 8(ஈ), (ஏ) மற்றும் (ஓ) தொடக்கம் (ஔ) வரையான பிரிவுகளின் பிரகாரம் நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல், நுகர்வோர் அமைப்புக்களை உருவாக்குதல், மேம்படுத்தல் போன்றன அதிகார சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளாகும். எனினும், 2011 ஜனவரி முதல் டிசெம்பர் வரையான காலப்பகுதியின் போது கீழே குறிப்பிடப்பட்டவாறு மாவட்ட அலுவலகங்களிலிருந்து அனுப்பப்பட்ட

முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் அப்பணிகள் நிறைவேற்றப்படுவதானது நலிவுற்ற நிலையில் இருக்கக் காணப்பட்டது.

| மாவட்டம் | நுகர்வோர் அமைப்புக்களை தாபித்தல் | நுகர்வோர் கல்வி அமைப்புகளை ஒழுங்கு செய்தல் |
|---|---|---|
| களுத்துறை | இல்லை | 01 |
| அம்பாந்தோட்டை | இல்லை | இல்லை |
| வவுனியா | இல்லை | இல்லை |
| மொனராகல | இல்லை | 08 |
| அம்பாறை | இல்லை | 03 |
| கண்டி | இல்லை | 02 |
| புத்தளம் | 04 | இல்லை |
| கம்பஹா | 03 | இல்லை |

### 4.2 பயன்படுத்தாதும் குறைவாகப் பயன்படுத்துவதுமான சொத்துக்கள்

நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அரசாங்க கடன்பட்டோர் எனக்குறிப்பிடப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு நிதிசார் கணக்கு மீதியில் ரூபா 21,837,975 திறைசேரியில் செயற்பாடற்ற கணக்காக 2004 தொடக்கம் மீளாய்வாண்டு வரை இருந்து வந்ததுடன் 2012 ஆகஸ்ட் மாதமளவில் அத்தொகை மீளப்பெறப்பட்டு நிதியத்தை உருவாக்கியதன் நோக்கத்திற்கு முரணாக வாடகை வாகனங்களுக்குச் செலவழிக்கப்பட்டிருந்தது.

### 4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

சேமிப்புக்குள்ளான மருத்துவ லீவாகிய 21 நாட்களுக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் அதிகார சபையின் திட்டத்திற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதும் அதற்கு முரணாக 2005 தொடக்கம் 2011 வரையான காலப்பகுதியின் போது 7 வருடாந்த லீவுத் தினங்களுக்கும் மொத்தமாக ரூபா 3,268,187 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

4.4 பிற அரச நிறுவனங்களுக்கு வழங்கிய அதிகார சபையின் வளங்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நேரடி அமைச்சில் பணியாற்றும் பெண் உத்தியோகத்தர் ஒருவரினதும் அமைச்சரின் பதவியணியில் ஊடகச்செயலாளராக இருப்பவரினதும் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான தொலைபேசிக் கட்டணம் மற்றும் சம்பளம் ஆகிய முறையே ரூபா 314,000, ரூபா 180,000 என்பன அதிகார சபை நிதியிலிருந்து வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிற்கு உரிய டிபென்டர் வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கும் அதற்கான சேவைகளுக்கும் அதிகார சபை நிதியிலிருந்து ரூபா 3,361,475 செலவழிக்கப்பட்டிருந்தது. இதனை மீளளிப்பதற்கான கோரிக்கையை அமைச்சு நிராகரித்திருந்தது.

4.5 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய அதிகார சபையின் பதவியணி ஊழியர் ஒருவரது சராசரி ஆகு செலவு போன்ற தகவல்கள் கணக்காய்விற்குக் கோரப்பட்ட போதும் 2013 ஜனவரி 09 வரை அத் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) முறையான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை இல்லாது மீளாய்வாண்டின் போது 89 ஊழியர்கள் புதிதாக ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) அதிகாரசபையின் பதவியணிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட தகமைகளும் அனுபவங்களும் அற்ற விண்ணப்பதாரர் ஒருவர் 2008 பெப்ரவரி 15 ஆந் திகதியன்று நிதிப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். அவ்வாறிருக்கையில், அக் குறித்த விண்ணப்பதாரரால் ஆரம்பச் சம்பள அளவுத்திட்டத்தில் அமர்த்தப்படாது 2 சம்பள ஏற்றங்களுடன் அமர்த்தப்பட்டமையால் 2008 பெப்ரவரி 15 முதல் 2011 திசெம்பர் 31 வரை ரூபா 101,200 கூடுதல் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

5. கணக்களி தகைமையும் சிறந்த ஆளுகையும்

5.1 கூட்டுத்திட்டம்

அதிகாரசபை தயாரித்த கூட்டுத் திட்டம் 3 ஆண்டுகளுக்குக் குறையாத குறித்த காலத்திற்கென தயாரிக்கப்பட்டிராமையால் அது வருடா வருடம் முன்கொண்டு செல்லப்பட்டவாறிருக்கும் பதிவேடு ஒன்றாகவே அமைந்தது. அதன் காரணமாக, எந்தவொரு காலப்பகுதியிலேனும் அதிகாரசபை எய்துவதற்கிருந்த நோக்கம் / இலக்கு என்பவற்றைக் குறிப்பாக இனங்காண்பது சிக்கலானதாக காணப்பட்டது.

5.2 செயற்பாட்டுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்பாட்டுத் திட்டத்தினூடாக குறித்த காலப்பகுதியின் போது எய்துவதற்கு எண்ணியுள்ள பணிகளைத் தெளிவுற இனங்காண முடியுமாயினும், அதிகார சபை தயாரித்த செயற்பாட்டுத் திட்டத்தில் நிலவிய குறைபாடுகளும் தெளிவின்மையும் காரணமாக அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கை எய்த முடியுமா என்பதை உறுதி செய்ய முடியாதிருந்தது.

(ஆ) செயற்பாட்டுத் திட்டத்தின் 5.4.a, 5.4.b, 5.4.c ஆகிய விடயங்களின் பிரகாரம், செயற்திறன் மற்றும் ஏனைய பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை இனங்காணுதல், பதவியணிக்கான ஊழியர் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களை வழங்குதல், பதிப்பாய்வு செய்தல் என்பன மேம்பாட்டுப் பிரிவின் பொறுப்பாகக் குறிப்பிடப்பட்ட போதும் 2011 ஆம் ஆண்டில் ஒரு உத்தியோகத்தரை நிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்குபற்றச் செய்தது மாத்திரமே முன்னேற்றமாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(இ) அவ்வாறே, அதிகார சபை தயாரித்த செயல் திட்டத்தில் உள்ளடங்கிய 8 விடயங்கள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

5.3 வருடாந்த அறிக்கை

2003 ஜுன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 150 நாட்களுக்குள் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2010 ஆம்

ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் 2012 ஆகஸ்ட் 24 ஆந் திகதியன்றே முன்வைக்கப்படுவதற்காக அனுப்பிவைக்கப்பட்டது.

**5.4 பொது முயற்சிகள் மீதான குழுவினது கட்டளை செயற்படுத்தப்படாமை**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) 2011 நவம்பர் 14, 15 ஆகிய இரு நாட்களில் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுவினால் அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு முறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் பதில் கடமையாற்றும் அடிப்படையில் நியமிக்கப்பட்ட 8 உத்தியோகத்தர்களது பதவிகள் 3 மாதங்களுக்குள் நிரப்பப்பட வேண்டும் எனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்ட போதும், 2012 திசெம்பர் 24 ஆந் திகதியளவிலும் உள்ளகக் கணக்காய்வுக் பிரிவு முறையாக அமைக்கப்படுதற்கும் பதில் கடமையாற்றியோர் வெற்றிடங்கள் பதவி நிரப்பப்படுவதற்குமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 திசெம்பர் 22 ஆந் திகதிய சீஏஏ/எச்ஆர்ஏ/109/2010/ஏஓபீ – 10 – 02 பணிப்பாளர் சபைக் குறிப்பின் வாயிலாக 2011 ஆம் ஆண்டில் உசாத்துணையாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டு ரூபா 504,000 கொடுப்பனவு செய்யப்பட்டபோதும், இந்நியமனத்திற்கு மேற் குறித்த திகதியில் நடைபெற்ற பொது முயற்சிகள் மீதான குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைப் பிரகாரம் முறைப்படி அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 பணிப்பாளர் சபைக் கூட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர் எண்ணிக்கை 24 ஆகும். எனினும், அதில் மூன்று அங்கத்தவர்கள் எந்தவொரு கூட்டத்திலும் கலந்து கொண்டிருக்கவில்லை.

(ஆ) ஏனைய அங்கத்தவர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதும் ஒழுங்காக அமையவில்லை. ஆண்டின் போது நடைபெற்ற 12 கூட்டத் தொடர்களில் 10 கூட்டத்தொடர்களில் அவர்களது வருகை 50 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்பட்டது.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

அதிகாரசபை தயாரித்த பாதீட்டில் நிலவிய கீழே குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் காரணமாக பாதீடானது சிறந்த நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(அ) நிதியேற்பாடின்றி 4 சந்தர்ப்பங்களில் ரூபா 22,837,824 செலவிடப்பட்டிருந்தது. 4 சந்தர்ப்பங்களில் மொத்த நிதியேற்பாடான ரூபா 6,730,000 செலவிடப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) மதிப்பிடப்பட்ட செலவிலும் கூடுதலாக 9 விடயங்களுக்குச் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு கூடுதலாகச் செலவிடப்பட்ட தொகை ரூபா 21,783,932 ஆகும்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நுகர்வோர் புகார்களுக்கான அறிக்கைகளைப் பேணுதல்
(ஆ) வாகனக் கட்டுப்பாடு
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) கையிருப்புக் கட்டுப்பாடு
(உ) ஆளணி முகாமைத்துவம்

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இல. நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2) (இ) இன் நியதிகளின்படி, 2011.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானங்கள் மீதான தவிசாளரின் கருத்துரைகள்**

2.2.1) நியாய வியாபார ஆணைக்குழு மற்றும் உள்நாட்டு வர்த்தக திணைக்களம் ஆகியவற்றின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் உரிமை மாற்றமானது 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டுகளில்நிடித்த வருமானக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதன் மூலமாக மேற்குறித்த வேறுபாடானது சொதுக்களின் பெறுமதிக்கும் நீடித்த வருமானத்திற்கு மிடையில் எழுந்துள்ளது. இது 2010 ஆம் ஆண்டுக்கான கணக்குகளின் மூலம் சரி செய்யப்பட்டுள்ளது.

**2.2.2) கணக்கீட்டு குறைபாடுகள்**

வரைபு நிதிக்கூற்றுக்களிலுள்ள அனைத்து குறைபாடுகளும் சரி செய்யப்பட்டுள்ளதுடன் இறுதி கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**2.2.3) சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

**அ) 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டம்**

i) **பிரிவு 3(1)**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் சபையானது கௌரவ அமைச்சர் அவர்களினால் நியமிக்கப்படுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட தகமையினைக் கொண்டிருக்காத அத்தகைய ஆட்களை அவர்களின் பதவிகளிலிருந்து நீக்குவதற்கு அமைச்சின் செயலாளரினூடாக அமைச்சருக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**ii) பிரிவு 27**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தினைத் திருத்துவது தொடர்பில் சட்டமா அதிபரிடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றதன் பின்னர் தேவையான நட்வடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

அ) 2011 ஆம் அண்டின் 22 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறு 2006 ஆம் அஅண்டின் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 4(2) இன் ஏற்பாடுகளின் நியதிகளின்படி.

இத்தகைய வரிகள் உரிய அதிகாரிகளினால் அறவீடு செய்யப்பட்டு 2012 இல் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**அ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள்**

**i) <u>நி.பி. 133 மற்றும் 134</u>**

2013.03.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு பெண் உத்தியொகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் கணக்குகள் பிரிவின் இரண்டு அநுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்கள் கணக்காய்வு பிரிவுக்கு இணைக்கப்பட்டுள்ளார்கள். கணக்காய்வுப் பிரிவுக்கு நிரந்தரமாக இரண்டு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்குரிய நேர்முகப் பரீட்சைகள் நடாத்தப்பட்டுள்ளன.

**ii) <u>நி.பி.371(2) (ஆ)</u>**

பணிப்பாளர் சபை கூட்டங்கள், விலை குழு கூட்டங்கள், கணக்காய்வு கூட்டங்கள் மற்றும் விசேட திடீர் சோதனைகள் என்பவற்றிற்கு பெறப்பட்டுள்ள முற்பணங்கள் இதன்கீழ் உள்ளடங்குவதுடன் மேற்குறித்த பணிகளை நிறைவேற்றுவதற்காக அத்தகைய முற்பணங்கள் செலவுகளைக கருதப்படுவதுடன் அவை கட்டுநிதியாக கருதப்படமாட்டாது. அதற்கிணங்க, அதிகாரசபையானது இத்தகைய முற்பணங்களை தற்போதிருக்கும் எல்லைகளினுள் வழங்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளது. மேற்படி முற்பணங்களை வழங்கும் போது கணக்காய்வு அறிவுறுத்தல்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தலைமை அலுவலகத்திற்கான கட்டுநிதி எல்லையினை ரூபா.75,000/- வரையிலும் மாவட்ட அலுவலகத்திற்கான எல்லையினை ரூபா 50,000/- வரையிலும் அதிகரிப்பதற்கு திறைசேரியிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

**iii) <u>நி.பி.371 (5)</u>**

அதிகாரசபையின் தொழிற்பாட்டு சூழ்நிலைக்கமைவாக, டிசம்பர் 31 இற்கு முன்னதாக மேற்குறித்த முற்பணங்களைக் கொடுத்து தீர்ப்பது மிகவும் கடினமானதாகும். கொழும்புக்கு வெளியே நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சந்தை திடீர் சோதனைகள் போன்றவற்றிற்காக விசேடமாக பெறப்பட்ட முற்பணங்களை கொடுத்து தீர்ப்பது நடைமுறையில் கடினமானதொன்றாகும். டிசம்பர் 30 இற்கு முன்னதாக பெறப்பட்ட முற்பணங்களும் மேற்குறித்த தொகையினுள் உள்ளடங்குகின்றன. எவ்வாறாயினும், இவ்விடயத்திற்கு தீர்வு காண்பதற்கு எதிர்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**ஆ) 2003 ஜீன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இல.பொது தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை**

i. 2010 செப்ரெம்பர் 01 ஆம் திகதிய PF/FS/05/(viii) ஆம் இல. அரச நிதி சுற்றறிக்கையின் 8.3.4 ஆம் பந்தி

மேற்படி சுற்றறிக்கைகளின்படி, மூன்று நிறுவனங்களின் தொலைபேசி பட்டியல்களுக்கான கொடுப்பனவுக்காக உத்தியோகத்தர்கள் மாதாந்தம் ஆகக்கூடிய திரண்ட செலவின எல்லையினை பின்பற்றி வந்துள்ளார்கள். நிறுவனத்தின் நிலையான தொலைபேசிகளுக்கான செலவினமும் ரூபா 2,055,869/- குறித்த தொகையினை உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் அவர்களின் உரிய மாதாந்த ஆகக்கூடிய திரண்ட எல்லைகளுக்கமைவாக ஏற்பட்ட செலவினமானது தனித்தனியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ii. அதிகாரசபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் சாரதிகளுக்கு அதிகாரசபையின் தொலைத்தொடர்பு வலையமைப்பின் கீழ் டயலொக் நிறுவனத்திடமிருந்து இலவசமாக பெறப்பட்ட தொலைபெசி வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த வசதியினூடாக நாம் தொலைபேசி இலக்கம் ஒன்றிற்குரிய வரியான ரூபா.122.45 இனை மட்டுமே செலவு செய்துள்ளதுடன் இதன்காரணமாக, அதிகாரசபையினால் அளிக்கப்பட்டு வரும் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் சேவைகளை சீராக மேற்கொள்ள முடிந்துள்ளது.

iii. பந்தி 8.3.5(a)

2011.11.14 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட பொது தொழில் முயற்சிகள் மீதான குழுக் கூட்டத்தில், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது “அ” தரத்தினைச் சேர்ந்த நிறுவகமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆகையால், இதனுடன் தொடர்புடைய விடயங்கள் எழுந்திருக்கவில்லை. மேலும், நிறுவனத்தின் பிரதி பணிப்பாளருக்கான போக்குவரத்து படி கொடுப்பனவுக்கான அங்கீகாரமானது பொது நிருவாக சுற்றிக்கை இல. 22/99 இன் கீழ் CAA/HRA/66/2010/ADB-06-03 மற்றும் CAA/HRA47/2012 ஆம் இல. அமைச்சரவை பத்திரங்களின் மூலமாக வழங்கப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக விசேட அங்கீகாரத்தினைப் பெறும் பொருட்டு பொது திறைசேரிக்கு மீளவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

iv. பந்தி 9.3.1

மேற்படி நோக்கத்திற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளிலிருந்து இரண்டு உத்தியோகத்தர்கள் நிரந்தர அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 8 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது, அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் 2 பதவிகளின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப் பட்டுள்ளார்கள். நிரந்தர அடிப்படையில் உதவி பணிப்பாளர் (பிராந்திய) ஒருவரை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர்(விலையிடல் முகாமைத்துவம்) பதவிக்கு பொருத்தமான ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

v. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் ஆட் சேர்ப்புத் திட்டத்தினை நிறைவு செய்து சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளது. சேவையின் முக்கியத்துவத்தினைக கருத்தில் கொண்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து ஆட்சேர்ப்புக்களுக்கு விசேட அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

vi. பந்தி 9.10

சேவையின் அவசியத்தினைக் கருத்தில் கொண்டு அத்தகைய ஆட்சேர்ப்புக்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அநுமதியுடன் மேற்கொள்ளப்பட்டன.

**ஆ) 2010 டிசம்பர் 07 ஆம் திகதிய 150 ஆம் இல. வரவு செலவுத்திட்ட சுற்ற்றிக்கை மற்றும் 2013 ஆம் ஆண்டின் மார்ச் 28 ஆம் திகதிய <u>MF/TR/1/2003 ஆம் இல. நிதி திட்டமிடல் அமைச்சின் கடிதம்</u>**

தலைமை அலுவலகத்தினால் நாடுபூராகவுமுள்ள 22 நிருவாக மாவட்டங்களில் அமுல்படுத்தப்படுகின்ற திடீர் சோதனைகள், பாவனையாளர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாக நடவடிக்கைகளுக்காக 27 வாகனங்கள் மட்டுமே தேவைப்படுகின்றன. 2010 டிசம்பர் 07 ஆம் திகதிய 150 ஆம் இல. வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின்படி, அதிகாரசபையானது 25 வாகனங்களை மட்டுமே திறைசேரியிடம் கோரியிருந்ததுடன் முதலாம் கட்டமாக திறைசேரியினால் 06 வாகனங்கள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க,

அதிகாரசபையின் இலக்குப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை தொடர்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் சீராகவும் மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி நடவடிக்கைகளுக்காக ஏனைய வாகனங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்தன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கா விடின் இதுவரையில் அதிகாரசபையினால் அடையப் பெற்றிருந்த முன்னேற்றத்தினை பெற்றிருக்க முடியாது. ஆகையால், நிறுவனத்தின் தேவை கருதி, வாகனங்கள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும். திறைசேரியினால் வழங்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கையினைக் கருத்தில் கொண்டு வாடகைக்கு பெறப்பட்ட வாகனங்கள் மீளளிக்க முடியும். மேற்படி வாகனங்கள் உரிய மாவட்டங்களிலுள்ள பொதுவான வாடகை பெறுமதியின் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டன.

**இ) 2010 செப்ரெம்பர் 20 ஆம் திகதிய CAA/AH/R/74/2010 ஆம் இல. பணிப்பாளர் சபை பத்திரம்**

அதிகாரசபையில் அப்போது நிலவிய சூழ்நிலையின் அடிப்படையில் 30% குறைபபானது எதிர்பார்க்கப்பட்டது. (சேவை நிபந்தனை மற்றும் பதவியணி) தற்போது அதிகாரசபையின் பங்களிப்பானது விரிவாக்கப்பட்டதுடன் பதவியணியும் அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக தொலைபேசி பட்டியல்களும் அதிகரித்துள்ளன. இலக்குப்படுத்தப்பட்ட திடீர் சோதனைகளின் அறிமுகப்படுத்தலுடன் பதவியணிக்கு மேலும் ஆட்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை அதிகளவில் மேற்கொண்டதன் காரணமாகவும் முன்னரைக் காட்டிலும் அதிகளவிலான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்று வருவதனால் அதிகாரசபையானது அவற்றிற்கெல்லாம் பதிலளிக்க வேண்டியிருப்பதால் தொலைபேசி பட்டியல்களின் தொகையானது கணிசமானளவு அதிகரித்துள்ளது. மேற்குறித்த நடவடிக்கைகளின் காரணமாக தண்டப்பணம் மூலமாக பெறப்படும் வருமானமும் அதிகரித்துள்ளது.

2010 ஆம் ஆண்டில், மாதாந்தம் ஆகக்குறைந்த்து 6 திடீர் சோதனைகளை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்டள்ளதுடன் 2011 இல் இது 36 ஆக அதிகரிக்கப்பட்டதன் காரணமாக தொலைபேசி வெசதிகளுக்கான செலவினமும் 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்துள்ளது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறு

2011 ஆம் ஆண்டுக்கான அதிகாரசபையின் செயற்பாடுகள், 2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 21,763,716/- ஆக இருந்துள்ளதுடன் இது 2011 இல் 12,618,138/- இனை மிகையாக காட்டியுள்ளதுடன் இது நிதிசார் பெறுபேறுகளில் வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. ஆளுக்குரிய வேதனாதிகள், ஒப்பந்த சேவைகள் மற்றும் ஏனைய தொழிற்பாட்டு செலவினம் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு இதற்கு பிரதான காரணமாக அமைந்துள்ளதுடன் முன்னைய ஆண்டுக்கான அதிகாரசபையின் தொழிற்பாட்டு செலவுகள் ரூபா.140,960,486 ஆக இருந்துள்ளதுடன் இது குறித்த மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் ரூபா 194,667,564/- ஆக இருந்துள்ளதுடன் இது 38.1% அதிகரிப்பினை பிரதிபலிக்கின்றது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயல் நிறைவேற்றுகை

சட்டத்தின் 40 ஆம் பிரிவின்படி, 37 இன் பிரிவு இன் கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பம் தொடர்பில், அத்தகைய விண்ணப்பம் மீது அதன் கட்டளையினைக் கேட்டு தீர்மானிப்பது பேவையின் கடமையாக அமைதல் வேண்டும்.

சட்டத்தின் பிரிவு 19(1), 22(10) மற்றும் 37(1) இன்படி, பணிப்பாளர் நாயகம் மற்றும் அதிகாரசபை என்பன தேவையானது எனக் கருதப்படுமிடத்து அத்தகைய விடயத்தினை பேரவைக்கு புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரிக்கை விடுக்கலாம்.

பிரிவு 38 இன்படி, எவரேனும் நபர் அல்லது அமைப்பு பேரவைக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும். அதற்கிணங்க, ஒவ்வொரு ஆண்டும் பேரவையின் இலக்குகளை வழங்குவது நடைமுறை சாதியமற்றதாகும்.

புலனாய்வானது மேற்கொள்ளப்படுகையில் சமர்ப்பித்தலுகளுக்காக திகதியொன்றினை தரப்பு கேட்குமிடத்து, சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, தரப்புக்கு திகதியொன்று வழங்கப்படலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில் கட்டளை/ அறிக்கையொன்றுக்கான குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் புலனாய்வினை பூர்த்தி செய்து வழங்க முடியாமல் போகலாம்.

பேரவையின் குறித்த செலவுகள் சம்பளங்கள், கூலிகள், படிகள், தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் சிறப்புரிமைகள் அவ்வாறே பேரவையின் பேணுதல் செலவுகள் என்பனவற்றினை உள்ளடக்குகின்றது. வாடகை சபை, கடன் இணக்க சபை மற்றும் தொலைத் தொடர்பு ஆணைக்குழு ஆகியவற்றினைப் போன்றே இப் பேரவையும் பணத்தினை சம்பதிப்பதற்காக அல்லாது சந்தை முறைமையினை ஒழுங்கமைப்பதற்காக தாபிக்கப்பட்டதாகும். மேலும், பேரவையின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட, பேரவைக்கு சம்ரப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் / குறிப்பீடுகள் தொடர்பில் நீங்கள் சுட்டிக் காட்டியுள்ளீர்கள்.

ஆ) பழங்கள் மற்றும் மரக்கறிகளை பொதி செய்வதற்காக பிளாஸ்ரிக், கடதாசி அல்லது மரத்தினாலான கொள்கலன்களைப் பயன்படுத்துமாறு அரசாங்க அறிவித்தலின் மூலமாக விடுக்கப்பட்ட கட்டளையினை அமுல்படுத்துவதற்கு அதிகாரசபையினால் பல்வேறு நடவடிக்கைகள் (உரிய தரப்புக்களின் கவனத்திற்கு கொண்டு வருதல், திடீர் சோதனைகளை நடாத்துதல்) எடுக்கப்பட்டுள்ளன. இந்நடவடிக்கை தொடர்பில் அதிகாரசபையானது தொடர்ச்சியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது. மேற்குறித்த கட்டளையினை முறையாக செயற்படுத்த தவறிய 108 வியாபாரிகளுக்கெதிராக அதிகாரசபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக திடீர் சோதனைகளை நடாத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, இவ்விடயம் தொடர்பில் அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவு பயனற்று போயுள்ளதுடன் தேசிய முக்கியத்துவம் மிக்க இக்கருத்திட்டத்தின் பயன்களைப் பெற்றுக் கொள்கின்ற அனைத்து தரப்புக்களுடனும் (விவசாயிகள், கொண்டு செல்வோர், பாவனையாளர்கள்) பயன்மிக்க முதலீட்டினை மேற்கொள்வதற்கு அதிகாரசபையானது ஆரம்ப கட்ட நடவ்டிக்கைகளை எடுத்துள்ளது.

இ) பாவனையாளர்களுக்கிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல், பாவனையாளர் அமைப்புக்களை தாபித்தலும் மேம்படுத்துதலும் ஆகியன அதிகாரசபையின் தொழிற்பாடுகளாகும். அதற்கிணங்க, குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள் அதிகாரசபையின் செயல் திட்டதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றமானது மாதாந்தம் நடாத்தப்படும் மாவட்ட முன்னேற்ற மீளாய்வு நிகழ்ச்சித்திட்டங்களில் மீளாய்வு செய்யப்படும். சந்தை திடீர் சோதனைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு மேலாக, மாவட்ட அலுவலகங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இணைப்புச் செய்யப்பட்டுள்ள புலனாய்வு உத்தியோகத்தர்களின் மூலமாக இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்போது புதிய புலனாய்வு உத்தியொகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் விழிப்புணர்வினை மேற்கொள்வதற்கும் பாவனையாளர் அமைப்புக்களின் தாபித்தலை ஊக்குவிப்பதற்கும் மாவட்ட அலுவலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். இத்தகைய உத்தியோகத்தர்களுக்கு

மேலதிகமாக 52 பட்டதாரிகள் அமைச்சினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மேற்குறித்த நோக்கங்களுக்காக மாவட்ட அலுவலகங்களில் இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள்.

**4.2 <u>பயன்பாடற்றதும் குறைந்தளவில் பயன்படுத்தப்படுகின்றதுமான சொத்துக்கள்</u>**

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது குறித்த தொகையினை மீளப் பெறுவதில் தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ள போதிலும் பொது திறைசெரியினால் இது தொடர்பில் சில விளக்கங்கள் கோரப்பட்டுள்ளமையால் தாமதமடைந்துள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நாடு பூராகவுமுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக சநடதை நுண்ணாய்வு நடவடிக்கைகளை விரிவாக்கியுள்ளமையின் காரணமாக குறித்த மாவட்டங்களுக்கு போக்குவரத்து வசதிகளை உடனடியாக ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. தற்போதிருக்கும் நிதி ஏற்பாடுகள் போதாமல் உள்ளமையினால், 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் சட்டத்தின் பந்தி 49(அ) இலுள்ள ஏற்பாடுகளின் நியதிகளின்படி, நிதியினைப் பெறுவதற்கு பொது திறைசேரியிடமிருந்து அநுமதி கோரப்பட்டது. திறைசேரியினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தின்படி, சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி, நிதிகள் பயன்படுத்தப்பட்டன.

**4.3 <u>எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்</u>**

2003 ஆம் அண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் சட்டத்தின் நியதிகளின்படி, நியாய வியாபார ஆணைக்குழுவின் பதவியினருக்கு, நியாய வியாபார ஆணைக்குழுவின் நடைமுறைகளுக்கிணங்கியவாறு 21 நாட்களைக் கொண்ட மருத்துவ விடுமுறைக்கு செலுத்தப்பட்டது.

4.4 2003 ஆம் அண்டின் 09 ஆம் இல. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 72(2) (ஆ) (viii) (அ) இன் படி, அதிகாரசபையில் வேலைவாய்ப்பினைப் பெறுவோர் இச்சட்டம் அமுலாக்கப்படுகின்ற திகதியிலிருந்து ஆணைக்குழுவின் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர்களுக்கும் உடனடியாக இது பொருந்துவதுடன் இச்சட்டத்தின் அமுலாக்கல் திகதியிலிருந்து உடனடியாக அவர்களுக்கு பொருந்துவதுடன் தொழிலின் அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அத் தொழிலினைப் பெறும் போதே ஏற்றுக்காள்ளுதலும் வேண்டும்.

முன்னர் அவர்கள் கவனம் செலுத்திய, மேற்குறித்த கட்டளையின் நியதிகளின்படியும் 2005 பெப்ரவரி 22 ஆம் திகதிய ஏடி/ஏரி/16 ஆம் இல. கடிதத்தின்படியும், சட்டத்தின் விதித்துரைக்கப்பட்டுள்ள கட்டளை மற்றும் அங்கீகாரம் அகியவற்றிற்கு அமைவாக நியாய வியாபார ஆணைக்குழுவின் பதவியினருக்கான விடுமுறை கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பின்னர், 2013.01.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் 21 நாட்களைக் கொண்ட மருத்துவ விடுமுறையினை மட்டும் காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலும், பொதுதிறைசேரியினால் மேற்குறித்த விடயங்களை தெளிவுபடுத்தியதன் பின்னர் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

## 4.5 <u>ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகார மூலங்கள்</u>

அ) இந்த உத்தியோகத்தர் அதிகாரசபையின் ஊடக பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் மேற்குறித்த தொகையானது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்தப் படியானது 2012 பெப்ரவரியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ரூபா 5000/- இற்கு குறைக்கப்பட்டுள்ளதுடன் அதிகாரசபையின் தொலைபேசி வலையமைப்புக்கு சொந்தமான கையடக்க தொலைபேசி 2012 பெப்பரவியிலிருந்து ஊடகப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் குறித்த உத்தியோகத்தரின் தொலைபேசி பட்டியல்கள் எதுவும் அதிகாரசபையினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

ஆங்கிலத்தில் கடிதங்களை தட்டெழுத்து செய்வதற்கென அமைச்சரின் பதவியணியில் தற்காலிகமாக நியமிக்கப்பட்ட அதிகாரசபையின் பெண் ஊழியர் தற்போது அதிகாரசபையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆ) அதிகாரசபைக்கு தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டிருந்த அமைச்சுக்கு சொந்தமான டிபண்டர் ரக வாகனமொன்றின் திருத்தச் செலவான ரூபா 3,361,475/- அதிகாரசபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சானது ஏற்பாடுகள் இருக்குமிடத்து மேற்குறித்த தொகையினைச் செலுத்துவதற்கு உடன்பட்டுக் கொண்டது.

## 4.6 பதவியினர் நிருவாகம்

அ) இத்தவறினை சரி செய்வதற்கு கூடிய விரைவில் நடவடிக்க எடுக்கப்படும்.

ஆ) புதிய ஆட்சேர்ப்புக்களுக்கான உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையின்படி, முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கமைவாக உரிய புலனாய்வு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்கள்.

இ) அமைச்சின் செயலாளர் இந்த ஆட்சேர்ப்புத் தொடர்பில் அறிக்கையொன்றினைக் கோரியுள்ளதுடன் அவரை மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்திலேயே அமர்த்துமாறும் 2011 நவம்பர் 14 ஆம் திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதுடன் மேற்குறித்த அறிக்கையினைக் கருத்தில் கொண்டதன் பின்னர் குறித்த ஆடசேர்ப்புக்களும் சம்பள உயர்வுகளும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமையவில்லையென 2012, ஒக்டோபர் 03 ஆம் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால், குறித்த நடவடிக்கையானது 2012.10.03 ஆம் திகதிய அறிக்கையிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

## 5) நேர்மையும் நல்லாட்சியும்

### 5.1) ஒருங்கிணைந்த திட்டம்

ஒருங்கிணைந்த திட்டமானது ஒவ்வொரு காலாண்டிலும் அதிகாரசபையானது அதன் இலக்குகளை எவ்வாறு அடைகின்றது என்பதனை விபரிக்கிள்றது. மேலும், செயல்நிறைவேற்று குறிகாட்டிகளும் மேற்குறித்த அறிக்கையினுள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரசபையின் நோக்கு மற்றும் செயற்பணி ஆகியவற்றுடன் இணங்கியவாறு அமைச்சின் நோக்கு அடிப்படையில் 2013 ஆம் ஆண்டுக்கான ஒருங்கிணைந்த திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தந்திரோபாயங்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதிகூடிய செயல்நிறைவேற்றுத்துடன் மேற்குறித்த காரணிகளை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

## 5.2) செயல் திட்டம்

அ) விடை இல.5.1 இல் காட்டப்பட்டவாறு, 2011 ஆம் ஆண்டில் அடையப்பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் முன்னேற்றமானது உரிய இலக்குகளுடன் இனங்காணப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க, எதிர்பாரக்கப்படும் இலக்குகள் அடையப்பெறும்போது இது உறுதிசெய்யப்பட முடியும்.

ஆ) வகையீடு 5:4அ, 5:4ஆ, 5:4இ இற்கமைவாக, பயிற்சியளித்தல் வாய்ப்புக்களை இனங்காணல் மற்றும் பதவியினருக்கான சேவை பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல் அனைத்து திணைக்கள தலைவர்களினதும் கடமையாக இருந்துள்ளதாக செயல் திட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உரிய பிரிவுத் தலைவர்களினூடாக உரிய பிரிவுகளுக்கு தேவையான பயிற்சியளித்தலைப் பெற்றுக் கொள்வதுடன் மனிதவள மற்றும் நிருவாக பிரிவினூடாக உரிய பயிற்சியளித்தல் நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களை பங்குபெறச் செய்வதும் சிறந்ததொன்றாகும். தங்களின் கருத்துரைகள் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் 2013 ஆம் ஆண்டில் மேற்குறித்த தவறுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 5.3) <u>வருடாந்த அறிக்கை</u>

கணக்காய்வு அறிக்கையின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் 2011.11.22 ஆம் திகதியன்று மாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. இத்தாமதத்தின் காரணமாகவே வருடாந்த அறிக்கயானது இறுவட்டு வடிவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 5.4) <u>பொது தொழில்முயற்சிகள் மீதான குழுவின் கட்டளைகளை அமுல்படுத்தாமை.</u>

2013.03.01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் 2013.03.01 இலிருந்து அமுக்கு வரும்வகையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் அவருக்கு உதவியளிக்கும் முகமாக மேலும் இரண்டு உத்தியோகத்தர்கள் குறித்த பிரிவுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்கள். மேற்குறித்த பிரிவிலுள்ள இரண்டு பதில் பதவிகள் தவிர்ந்த ஏனைய அனைத்து வெற்றிடங்களும் 2013.02.01 ஆம் திகதியளவில் நிரப்பப்பட்டுள்ளன. தற்போது

பணிப்பாளர் (விலையிடல் மற்றும் முகாமைத்துவம்) மற்றும் உதவி பணிப்பாளர் (வலய) ஆகிய பதவிகள் தொடர்ந்தும் வெற்றிடமாகவெ உள்ளதுடன் மேற்படி பதவிகள் தொடர்பில் உரிய நெர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்பட்டுள்ளன.

ஆ) புதிய புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உசாவுலரின் சேவையானது 2011.12.31 ஆம் திகதியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளது.

**5.5) <u>பணிப்பாளர் சபை கூட்டங்கள்</u>**

அ) ஏதேனும் கூட்டங்களில் பங்குபற்றாத உறுப்பினர்களின் உறுப்புரிமையினை நீக்குவது தொடர்பில் அவரினால் எடுக்கப்படவுள்ள தீர்மானமானது கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

ஆ) கௌரவ அமைச்சர் அவர்கள் திருப்திகரமற்ற பங்களிப்பினை வழங்கி வரும் ஏனைய உறுப்பினர்களுக்கும் அறிவித்துள்ளார்

**5.6) <u>திட்டமிடல் கட்டுப்பாடு</u>**

அதிகாரசபையின் தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கும் விசேடமாக இலக்குப்படுத்தப்பட்ட திடிர் சோதனைகளை அறிமுகப்படுத்துவதற்குமான மதிப்பிடப்பட்ட செலவு விஞ்சியுள்ளது.

எதிர்காலத்தில் இந்நிலைமையினை சீராக்குவதற்கும் உரிய எல்லைகளினுள் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

6) **<u>முறைமைகளும் கட்டுப்பாடுகளும்</u>**

விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**ரூமி மர்சூக்,**

**தவிசாளர்**